winmeen.com

நான்காம் வார நடப்பு நிகழ்வுகள்

ஜூலை 2022

ஜூலை 22-31

1. NITI ஆயோக்கின் 2021 – இந்திய புதுமை கண்டுபிடிப்பு குறியீட்டில் முதலிடத்தில் உள்ள மாநிலம் எது?

அ. தமிழ்நாடு

ஆ. கர்நாடகா ☑

இ. கேரளா

ஈ. தெலுங்கானா

✓ NITI ஆயோக்கின் இந்திய புதுமை கண்டுபிடிப்பு குறியீட்டில் (2021) கர்நாடகா தொடர்ந்து மூன்றாவது முறையாக முதலிடத்தைப் பிடித்துள்ளது. இதன் முதல் பதிப்பு 2019 அக்டோபரிலும் இரண்டாவது பதிப்பு 2021 ஜனவரியிலும் வெளியிடப்பட்டது. இந்தியா புதுமை கண்டுபிடிப்பு குறியீடானது புத்தாக்க திறன்களின் அடிப்படையில் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை தரவரிசைப்படுத்துகிறது. தெலுங்கானா, ஹரியானா மற்றும் மகாராஷ்டிரா ஆகியவை சிறந்த மாநிலங்களின் பட்டியலில் இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது இடத்தில் உள்ளன. மணிப்பூர், 'வடகிழக்கு மற்றும் மலையக மாநிலங்கள்' பிரிவில் முதலிடத்தையும், சண்டிகர், 'யூனியன் பிரதேசம் மற்றும் நகரிய மாநிலங்கள்' பிரிவில் முதலிடத்தையும் வென்றன.

2. அண்மைச் செய்திகளில் இடம்பிடித்த, 'பாந்தியா ஆணைய' அறிக்கையுடன் தொடர்புடைய துறை எது?

அ. மக்களவை மற்றும் மாநிலங்களவையில் இட ஒதுக்கீடு

ஆ. உள்ளாட்சி அமைப்புகளில் இட ஒதுக்கீடு ☑

இ. பதவி உயர்வில் இட ஒதுக்கீடு

ஈ. குறைந்தபட்ச ஆதரவு விலை

✓ பாந்தியா ஆணையத்தின் அறிக்கையை ஏற்று, அந்த அறிக்கையின்படி தேர்தலை நடத்துமாறு மகாராஷ்டிர மாநில தேர்தல் ஆணையத்திற்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இது, மாநிலத்தில் நடக்கும் உள்ளாட்சித்தேர்தலில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பைச்சார்ந்த வேட்பாளர்களுக்கு அரசியல் ரீதியான இடஒதுக்கீட்டிற்கு வழிவகுக்கிறது. இதன்மூலம் அம்மாநில உள்ளாட்சித்தேர்தலில் வேட்பாளர்களுக்கு 27 சதவீத அரசியல் இடஒதுக்கீடு கிடைக்கும்.

3. இந்தியாவின் 15ஆவது குடியரசுத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?

அ. யஷ்வந்த் சின்ஹா

ஆ. திரௌபதி முர்மு ☑

இ. இராம்நாத் கோவிந்த்

ஈ. ஜகதீப் தங்கர்

✓ நடந்து முடிந்த தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணியின் குடியரசுத்தலைவர் வேட்பாளர் திரௌபதி முர்மு 64.03 சதவீத வாக்குகள் பெற்று வெற்றிபெற்றார். அவர் தனது போட்டியாளரான யஷ்வந்த் சின்ஹாவைவிட 6,76,803 வாக்குகள் பெற்று வென்றுள்ளார். திரௌபதி முர்மு, இந்தியாவின் குடியரசுத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பழங்குடி சார்ந்த அரசியல் தலைவர் என்ற வரலாற்றையும் உருவாக்கியுள்ளார்.

4. சமீப செய்திகளில் இடம்பெற்ற வாடகைத்தாய் (ஒழுங்குமுறை) சட்டம், 2021–உடன் தொடர்புடைய நடுவண் அமைச்சகம் எது?

அ. உள்துறை அமைச்சகம்

ஆ. சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் ☑

இ. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

ஈ. வெளியுறவு அமைச்சகம்

✓ செயற்கைக் கருத்தரிப்பு நுட்ப (ஒழுங்குமுறை) சட்டம், 2021 மற்றும் வாடகைத்தாய் (ஒழுங்குமுறை) சட்டம், 2021 ஆகியவற்றின்படி மனித கருமுட்டைகளை இறக்குமதி செய்வதை அரசாங்கம் தடைசெய்துள்ளது. இதனை அயல் நாட்டு வர்த்தக இயக்குநரகம் அறிவித்துள்ளது. முன்னதாக, நலவாழ்வு ஆராய்ச்சித்துறையின் வழிகாட்டுதல்களின் அடிப்படையில் ஆராய்ச்சி நோக்கங்களுக்காகத்தவிர வேறு எந்தக் காரணங்களுக்காகவும் மனித கருமுட்டைகளின் இறக்குமதி தடைசெய்யப்பட்டது.

5. சிறுத்தை மற்றும் வனவுயிரிகள் பாதுகாப்பை மீண்டும் தொடங்குவதற்காக கீழ்க்காணும் எந்த நாட்டுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டது?

அ. ஆஸ்திரேலியா

ஆ. நமீபியா ☑

இ. கென்யா

ஈ. கானா

✓ புது தில்லியில் இந்திய நடுவண் சுற்றுச்சூழல் அமைச்சரும் நமீபிய துணைப்பிரதமரும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இது மத்திய பிரதேசத்தில் உள்ள குனோ தேசிய பூங்காவில் எட்டுச் சிறுத்தைகளை மீண்டும் அறிமுகப்படுத்த வழிவகுக்கிறது. இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் வனவுயிரிகள் பாதுகாப்பு மற்றும் நிலையான பல்லுயிர் பயன்பாடு ஆகியவற்றில் ஒத்துழைப்பை உள்ளடக்கியது. இந்திய வனவுயிரிகள் நிறுவனத்தில் வனவுயிரிகள் மேலாண்மை படிப்புகளில் நமீபிய மாணவர்களுக்கு இந்தியா பயிற்சியளிக்கும்.

6. நடுவண் சுற்றுச்சூழல் அமைச்சகமானது கீழ்க்காணும் எந்த மாநிலம்/UT–இல் 'ஹரியாலி மகோத்சவத்தை' ஏற்பாடு செய்தது?

அ. மகாராஷ்டிரா

ஆ. புது தில்லி ☑

இ. உத்தர பிரதேசம்

ஈ. பஞ்சாப்

✓ சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் புது தில்லியில் 'அமுதப் பெருவிழாவின்' ஒருபகுதியாக 'ஹரியாலி மகோத்சவத்தை' ஏற்பாடு செய்துள்ளது. 'ஹரியாலி மகோத்சவம்' என்பது மரங்களின் முக்கியத்துவம் மற்றும் வனப்பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் 'மர விழா'வாகும். 'ஹரியாலி மகோத்சவம்', மாநில அரசுகள், காவல்துறை அமைப்புகள் மற்றும் தில்லியின் பள்ளிகளுடன் இணைந்து நடவுசார் இயக்கங்களை மேற்கொள்வதற்காக சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

7. அண்மைச் செய்திகளில் இடம்பிடித்த, 'வாரணாசி பேரறிவிப்பு'டன் தொடர்புடைய துறை எது?

அ. சுற்றுச்சூழல்

ஆ. கல்வி ☑

இ. விண்வெளி அறிவியல்

ஈ. மருத்துவ அறிவியல்

✓ கல்வி அமைச்சகமும் பல்கலைக்கழக மானியக்குழுவும் இணைந்து வாரணாசியில் அகில பாரதிய சிக்ஷா சமகத்தை (ABSS) ஏற்பாடு செய்துள்ளன. உயர்கல்வி குறித்த வாரணாசி பேரறிவிப்பு, ABSS–இன் எதிர்பார்க்கப்படும் விளைவு, இந்திய உயர்கல்வி ஆணையத்திற்கான காலவரிசையை அறிவிக்கும்.

✓ இப்பேரறிவிப்பின் மற்றொரு கூறு ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு மற்றும் தொழில்முனைவு (RIE) அனைத்து உயர்கல்வி நிறுவனங்களுக்கும் அணுகக்கூடியதாக இருப்பதை உறுதிசெய்வதாகும்.

8. 'நியூஸ் இனிஷியேட்டிவ் இந்தியா டிரெய்னிங் நெட்வொர்க்' என்பது எந்த நிறுவனத்தின் முனைவாகும்?

அ. மைக்ரோசாப்ட்

ஆ. கூகுள் ☑

இ. அமேசான்

ஈ. மெட்டா

✓ 5 புதிய இந்திய மொழிகளை உள்ளடக்கும் வகையில் கூகுள் தனது 'கூகுள் செய்திகள் முனைவு இந்தியா பயிற்சி வலையமைப்பை' விரிவுபடுத்தியுள்ளது. கூகுளின் இம்முனைவானது, இணையத்தில் பரவும் போலிச்செய்திகளைக் கையாளத் தேவையான டிஜிட்டல் திறன்களை பத்திரிக்கையாளர்களுக்கும் செய்தி நிறுவனங்களுக்கும் கற்பிக்க உதவுகிறது. இது இப்போது பஞ்சாபி, அஸ்ஸாமி, ஒடியா, குஜராத்தி மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளில் கிடைக்கும். "Google News Initiative India Training Network" ஆனது நான்கு ஆண்டுகளுக்கு முன்பு DataLeads உடன் இணைந்து தொடங்கப்பட்டது. கூகுள் DataLeads உடன் இணைந்து Fact–Check அகாதமியை தொடங்கவுள்ளது.

9. இந்தியாவில், 'முதலாவது இந்திய கால்நடைகள் நலவாழ்வு குறித்த உச்சிமாநாடு–2022' நடைபெறும் இடம் எது?

அ. புது தில்லி ☑

ஆ. சிக்கிம்

இ. அருணாச்சல பிரதேசம்

ஈ. கர்நாடகா

✓ மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் புருஷோத்தம் ரூபாலா, இந்தியாவில், முதலாவது கால்நடைகள் நலவாழ்வுகுறித்த உச்சிமாநாட்டைத் தொடங்கிவைத்தார். இந்த முதலாவது கால்நடைகள் நலவாழ்வுகுறித்த உச்சிமாநாடு – 2022 ஆனது புது தில்லியில் நடைபெற்றது. இது இந்திய உணவு மற்றும் உழவு அமைப்பு (ICFA) மற்றும் அக்ரிகல்ச்சர் டுடே குழுமத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது.

10. கூடங்குளத்தில் உள்ள அணுமின்னுற்பத்தி நிலையத்திற்கு தொழில்நுட்பம் வழங்குவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நாடு எது?

அ. அமெரிக்கா

ஆ. ரஷ்யா ☑

இ. பிரான்ஸ்

ஈ. இஸ்ரேல்

✓ கூடங்குளம் அணுமின்னுற்பத்தி நிலையத்தின் (KNPP) நான்கு மின்னுற்பத்தி அலகுகளுக்கு தெர்மோகப்பிள்களை வழங்குவதற்கு உருசிய அணுவாற்றல் நிறுவனமான Rosatom State Corporation–இன் ஒரு பிரிவு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. LUCH அறிவியல் தயாரிப்பு சங்கம், Rosatom–இன் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி பிரிவின் ஒரு பகுதியான NPP, செயற்முறை உபகரணங்களின் வெப்பக்கட்டுப்பாட்டிற்காக வடிவமைக்கப்பட்ட புதிய உணரிகளை வழங்கும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. உழவர் இரயில் திட்டம்

2020 ஆக.7ஆம் தேதி தொடங்கப்பட்ட உழவர் இரயில் சேவை, கடந்த ஜூன்.30ஆம் தேதி வரை 2,359 உழவர் இரயில் சேவைகளை இரயில்வே இயக்கியுள்ளது. வெங்காயம், வாழைப்பழம், உருளைக்கிழங்கு, இஞ்சி, பூண்டு, மாம்பழம், திராட்சை, மாதுளை, ஆரஞ்சு, சப்போட்டா, எலுமிச்சை, குடைமிளகாய், முட்டைக்கோஸ், காலிபிளவர் உள்ளிட்ட அழுகும் பொருட்களை சுமார் 7.9 இலட்சம் டன்கள் வரை ஏற்றிச்சென்றுள்ளது.

---

2. இந்திய வம்சாவளி பேராசிரியருக்கு சர்வதேச எரிசக்தி விருது

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பேராசிரியர் கௌசிக் இராஜசேகராவுக்கு மதிப்புமிக்க சர்வதேச எரிசக்தி விருது கிடைத்துள்ளது.

கௌசிக் இராஜசேகரா, ஹூஸ்டன் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். இவருக்கு மிகவும் மதிப்புமிக்கதாக கருதப்படும் சர்வதேச எரிசக்தி விருது வழங்கப்பட்டுள்ளது. போக்குவரத்து மின் மயமாக்கம், எரிசக்தி செயல்திறன் தொழில்நுட்பம், மின்னுற்பத்தியின்போது கரியமில வாயு வெளியேற்றத்தைக் குறைப்பதில் மிகச்சிறந்த பங்களிப்பை வழங்கியதற்காக இராஜசேகராவுக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

---

3. முதல் மலேரியா தடுப்பூசி: ஆப்பிரிக்காவில் அறிமுகம்

பொதுமக்களுக்குச் செலுத்துவதற்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள உலகின் முதல் மலேரியா தடுப்பூசியை உலக சுகாதார அமைப்பு (WHO) மாலாவி, கானா, கென்யா ஆகிய 3 ஆப்பிரிக்க நாடுகளில் அறிமுகப்படுத்தியுள்ளது.

கிளாக்ஸோஸ்மித்கிளைன் நிறுவனத்தால் தயாரிக்கப்படும், 'மஸ்கிரிக்ஸ் – Mosquirix' என்ற அந்தத்தடுப்பூசி 30% மட்டும் மலேரியாவைக் கட்டுப்படுத்தும் திறன்கொண்டது. மேலும், அத்தடுப்பூசியை நான்கு தவணைகள் செலுத்திக் கொள்ளவேண்டும். எதிர்பார்த்ததைவிட அதிக விலையும் மிகவும் குறைவான செயல்திறனைக் கொண்டுள்ளதால் இந்தத்தடுப்பூசிக்கு அளித்து வந்த நிதி ஆதரவை விலக்கிக்கொள்வதாக பில் & மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை அறிவித்துள்ளது.

---

1. இந்தியாவில், 'தேசிய கொடி நாள்' கொண்டாடப்படுகிற நாள் எது?

அ. ஜூலை.18

ஆ. ஜூலை.22 ☑

இ. ஜூலை.24

ஈ. ஜூலை.25

✓ ஒவ்வோர் ஆண்டும், ஜூலை.22 அன்று இந்தியா தேசிய கொடி நாளைக் கொண்டாடுகிறது. 1947ஆம் ஆண்டு இதே நாளில், இந்திய அரசியலமைப்பு அவை தேசியக்கொடியை ஏற்றுக்கொண்டது. 1947 ஜூலை.22–இல் இந்திய அரசியலமைப்பு அவையின் உறுப்பினர்கள் தில்லியில் உள்ள அரசியலமைப்பு மண்டபத்தில் கூடியபோது, சுதந்திர இந்தியாவுக்கான தேசியக்கொடியை ஏற்றுக்கொள்வதற்கான ஜவஹர்லால் நேருவின் தீர்மானத்தை அவ்வவை சட்டசபை முதலில் விவாதித்தது.

2. 'பிரதமர் வய வந்தனா யோஜனா'வின் பயனாளிகள் யார்?

அ. பள்ளி மாணவர்கள்

ஆ. மூத்த குடிமக்கள் ☑

இ. வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள பெண்கள்

ஈ. MSME-கள்

✓ பிரதமர் வய வந்தனா யோஜனாவானது 2017 ஜூலை.21 அன்று தொடங்கப்பட்டது. இந்தத் திட்டம் தொடங்கப்பட்டு சமீபத்தில் அதன் ஐந்தாமாண்டை நிறைவுசெய்தது. இத்திட்டத்தின்கீழ், 60 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் மொத்தமாக முதலீடு செய்வதோடு மாதாந்திர அல்லது ஆண்டு முறையில் ஓய்வூதியம் பெறலாம். PMVVY ஆனது 2023 மார்ச்.31 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. கடந்த 2020ஆம் ஆண்டின் திருத்தமானது, 2020–21ஆம் ஆண்டிற்கு ஆண்டுக்கு 7.40 சதவீதம் என்ற நிச்சயமான வருவாய் விகிதத்தை அனுமதிக்கிறது. இந்த விகிதம் ஒவ்வோர் ஆண்டும் மீட்டமைக்கப்படும்.

3. ஆசிய வளர்ச்சி வங்கியின் (ADB) சமீபத்திய மதிப்பீட்டின்படி, 2022–23–க்கான இந்தியாவின் வளர்ச்சி கணிப்பு என்ன?

அ. 7.2 % ☑

ஆ. 7.8 %

இ. 8.0 %

ஈ. 8.2 %

ADB

✓ ஆசிய வளர்ச்சி வங்கி இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை 7.2% ஆகக்கணித்துள்ளது. எதிர்பார்த்ததை விட அதிக பணவீக்கம் மற்றும் பண இறுக்கம் இதற்கான காரணங்களாக மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. இது 2023–24ஆம் ஆண்டிற்கான GDP வளர்ச்சி மதிப்பீட்டை முன்னர் மதிப்பிடப்பட்ட 8%–இலிருந்து 7.8%–ஆகக்குறைத்தது.

4. சமீபத்தில் நாஸ்காம் அமைத்த, 'டிஜிவானி கால் சென்டருக்கு' நிதியளிக்கிற தொழில்நுட்ப நிறுவனம் எது?

அ. மைக்ரோசாப்ட்

ஆ. கூகிள் ☑

இ. டுவிட்டர்

ஈ. மெட்டா

Google

✓ நாஸ்காம் அறக்கட்டளை, பெண் விவசாயிகள் தங்கள் வணிகத்தை அதிகரிக்க உதவும் வகையில், "டிஜிவானி கால் சென்டர்" என்ற அழைப்பு மையத்தை அமைத்துள்ளது. இது இலாப நோக்கற்ற இந்திய வேளாண் வணிக வல்லுநர் சங்கத்துடன் (ISAP) இணைந்து அமைக்கப்பட்டுள்ளது. ஹிமாச்சல பிரதேசம், உத்தரகண்ட், உத்தர பிரதேசம், பீகார், ஹரியானா மற்றும் இராஜஸ்தான் ஆகிய 6 மாநிலங்களிலுள்ள 20,000 கிராமப்புற பெண் தொழில்முனைவோரைச் சென்றடைவதற்காக இந்தத்திட்டம் ஒரு சோதனை அடிப்படையில் இயக்கப்படுகிறது. இந்தத் திட்டத்திற்கு கூகுள் நிறுவனம் நிதியளித்துள்ளது.

5. முக்தார் அப்பாஸ் நக்விக்குப்பிறகு நடுவண் சிறுபான்மை விவகாரங்கள் அமைச்சகத்தின் கூடுதல் பொறுப்பை ஏற்றுக்கொண்டவர் யார்?

அ. பியூஷ் கோயல்

ஆ. ஸ்மிருதி இரானி ☑

இ. ஜிதேந்திர சிங்

ஈ. இராஜ்நாத் சிங்

✓ நடுவண் பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஸ்மிருதி இரானி, நடுவண் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சகத்தின் கூடுதல் பொறுப்பை ஏற்றார். நடுவண் அமைச்சரவையிலிருந்து பதவிவிலகிய முக்தார் அப்பாஸ் நக்வியிடம் இருந்து அவர் அப்பொறுப்பினை ஏற்றார். தற்போது உள்நாட்டு வான்போக்குவரத்து அமைச்சக பொறுப்பிலிருக்கும் நடுவண் அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா, நடுவண் எஃகு அமைச்சகத்தின் கூடுதல் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

6. எந்த நகரத்தில், சுவாமி இராமானுஜாச்சாரியாரின், 'அமைதியின் சிலை'யை உள்துறை அமைச்சர் அமித் ஷா திறந்துவைத்தார்?

அ. அமராவதி

ஆ. பெங்களூரு

இ. ஸ்ரீ நகர் ☑

ஈ. பூரி

✓ ஜம்மு காஷ்மீர் மாநிலம் ஸ்ரீநகரில் சுவாமி இராமானுஜாச்சாரியாரின், 'அமைதியின் சிலை'யை உள்துறை அமைச்சர் அமித் ஷா திறந்து வைத்தார். இராமானுஜாச்சாரியார் ஒரு வேத தத்துவஞானி மற்றும் சமூக சீர்திருத்தவாதி என்று கருதப்படுகிறார். அவர் இந்தியா முழுவதும் பயணம் மேற்கொண்டு, சமத்துவம் மற்றும் சமூக நீதியை ஆதரித்தார். இராமானுஜாச்சாரியார் பக்தி இயக்கத்திற்கு புத்துயிர் அளித்ததற்காக அறியப்பட்டவர்.

7. இந்திய அரசாங்கம் சமீபத்தில் எந்தப் பழம் குறித்து, 'தேசிய மாநாட்டை' ஏற்பாடு செய்தது?

அ. மாங்கனி

ஆ. டிராகன் பழம் ☑

இ. லிச்சி

ஈ. அன்னாசி

✓ வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம், 'டிராகன் பழ தேசிய மாநாட்டை' ஏற்பாடு செய்தது. டிராகன் பழ சாகுபடியை ஊக்குவிக்க நடுவணரசு முடிவுசெய்துள்ளது. அது, "சூப்பர் பழம்" என்றும் அழைக்கப்படுகிறது. தற்போது, இந்த அயல்நாட்டு பழம், 3,000 ஹெக்டேரில் பயிரிடப்பட்டு வருகிறது; ஐந்தாண்டுகளில் அதன் சாகுபடியை 50,000 ஹெக்டேராக அதிகரிக்க திட்டம் உள்ளது. குஜராத் மற்றும் ஹரியானா மாநில அரசுகள் இந்த டிராகன் பழங்களைப் பயிரிடுவதற்கு ஏற்கனவே ஊக்கத்தொகை வழங்கியுள்ளன.

8. நடுவண் சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் அறிக்கையின்படி, 2021–இல் இந்தியாவால் எத்தனை விலங்கினங்கள் சேர்க்கப்பட்டன?

அ. 54

ஆ. 24

இ. 240

ஈ. 540 ☑

✓ புதிய கண்டறிவுகள் மற்றும் விலங்கினங்கள் மற்றும் தாவரங்களின் புதிய பதிவுகள்பற்றிய விவரங்களை நடுவண் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சர் பூபேந்திர யாதவ், கொல்கத்தாவில் அமைந்துள்ள இந்திய விலங்கியல் ஆய்வகத்தில் வெளியிட்டார். 2021ஆம் ஆண்டில் இந்தியா தனது விலங்கினங்களின் தரவுத்தளத்தில் 540 இனங்களைச் சேர்த்தது. இதையடுத்து மொத்த விலங்கு இனங்களின் எண்ணிக்கை 1,03,258 ஆக உள்ளது. ஒரு புதிய பாலூட்டி இனமான வெண்பற்கொண்ட ஷ்ரூ (*Crocidura narcondamica*), அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுக்கூட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

9. பிரத்தியேகமான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு (R&D) கொள்கையைக் கொண்ட நாட்டின் முதல் மாநிலமாக மாற உள்ள மாநிலம் எது?

அ. புது தில்லி

ஆ. சிக்கிம்

இ. அருணாச்சல பிரதேசம்

ஈ. கர்நாடகா ☑

✓ பிரத்தியேக ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு (R&D) கொள்கையை கொண்டுள்ள நாட்டின் முதலாவது மாநிலமாக கர்நாடகா உருவாகவுள்ளது. அக்கொள்கையானது அதன் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் குறைந்தபட்சம் 0.1 சதவீதத்தை R&D மற்றும் கண்டுபிடிப்புகளுக்கு ஒதுக்க எண்ணுகிறது. பிரத்யேக விண்வெளி மற்றும் பாதுகாப்பு R&D கொள்கையைக்கொண்ட முதல் மாநிலம் கர்நாடகா ஆகும். இது ஒரு தனி குறைக்கடத்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கொள்கையையும் கொண்டுள்ளது.

10. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற மங்கர் சிறுகுன்று அமைந்துள்ள மாநிலம் எது?

அ. பஞ்சாப்

ஆ. இராஜஸ்தான் ☑

இ. உத்தர பிரதேசம்

ஈ. பீகார்

✓ குஜராத் மாநில எல்லைக்கு அருகில் இராஜஸ்தான் மாநிலத்தில் அமைந்துள்ள மங்கர் சிறுகுன்றானது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச்சின்னமாக அறிவிக்கப்படவுள்ளது. இது, கடந்த 1913இல் 1500 பில் பழங்குடியின விடுதலைப் போராளிகள் படுகொலை செய்யப்பட்ட ஒரு பழங்குடி எழுச்சியின் தளமாகும். அந்த இடத்தில் கூடியிருந்த பழங்குடியினர், சமூகத்தின் தலைவர் கோவிந்த் குரு தலைமையில் ஒரு கூட்டத்தை நடத்திக்கொண்டிருந்தனர். இந்த இடம், 'ஆதிவாசி ஜாலியன்வாலா' என்றும் அழைக்கப்படுகிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. இந்தியாவில் 854 பேருக்கு 1 மருத்துவர்: உலக சுகாதார நிறுவன பரிந்துரையைவிட அதிகம்

இந்தியாவில் 854 பேருக்கு ஒரு மருத்துவர் என்ற அளவில் மருத்துவர்கள்–மக்கள் விகிதாசாரம் உள்ளது. இது, உலக சுகாதார நிறுவனத்தின் பரிந்துரையான 1,000 பேருக்கு ஒரு மருத்துவர் என்ற தரநிலையைவிட மேம்பட்டது என்று நடுவண் அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, மக்களவையில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு, நடுவண் சுகாதார துறை இணையமைச்சர் பாரதி பிரவீண் பவார் எழுத்துபூர்வமாக அளித்த பதிலில் கூறப்பட்டுள்ளதாவது:

தேசிய மருத்துவ ஆணையத்தின் தகவல்படி, இந்த ஆணையத்திலும் மாநில மருத்துவ கவுன்சில்களிலும் 13,08,009 அலோபதி மருத்துவர்கள் பதிவுசெய்துள்ளனர். இது, கடந்த ஜூன் மாதம் வரையிலான நிலவரமாகும். இதுதவிர 5.65 இலட்சம் ஆயுஷ் மருத்துவர்கள், 34.33 லட்சம் பதிவு செய்யப்பட்ட செவிலியர்கள், 13 லட்சம் துணை மருத்துவ மற்றும் சுகாதார பணியாளர்கள் உள்ளனர். அரசு மருத்துவமனைகளில் தேவையான சுகாதார பணியாளர்களை நியமிப்பதும் போதிய படுக்கை வசதியை உறுதிசெய்வது சம்பந்தப்பட்ட மாநில அரசுகளின் முக்கிய பொறுப்பாகும்.

நாட்டில் மருத்துவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. கடந்த 2014–இல் 51,348–ஆக இருந்த இளநிலை மருத்துவப் படிப்பு இடங்களின் எண்ணிக்கை இப்போது 91,927–ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. இது 79% உயர்வாகும். இதேபோல், முதுநிலை மருத்துவப்படிப்பு இடங்களின் எண்ணிக்கை கடந்த 2014–இல் 31,185–ஆக இருந்தது. இன்றைய தேதியில் இது 60,202–ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மருத்துவர்கள்–மக்கள் விகிதாசாரத்தை மேம்படுத்தும் நோக்கில், மத்திய அரசின் பங்களிப்புடன் 157 புதிய மருத்துவக் கல்லூரிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, 72 கல்லூரிகள் செயல்பாட்டுக்கு வந்துள்ளன என்று அமைச்சர் பாரதி பிரவீண் பவார் தெரிவித்துள்ளார்.

---

2. 68–ஆவது தேசிய திரைப்பட விருதுகள்: 'சூரரைப்போற்று' சிறந்த திரைப்படம்; சிறந்த நடிகராக சூரியாவுக்கு விருது

கடந்த 2020–ஆம் ஆண்டு வெளியான 'சூரரைப்போற்று' திரைப்படத்துக்கு தேசிய விருது அறிவிக்கப்பட்டுள்ளது. சிறந்த திரைப்பட விருதுடன், அந்தப் படத்தில் நடித்த சூரியா சிறந்த நடிகராகவும் அபர்ணா பாலமுரளி சிறந்த நடிகையாகவும் தேசிய விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு புதுமுக இயக்குநர் மடோன் அஸ்வின் இயக்கத்தில் வெளியான 'மண்டேலா' திரைப்படத்துக்கு இரண்டு விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

தில்லியில் 68–ஆவது தேசிய திரைப்பட விருதுகள் அறிவிக்கப்பட்டன. இந்த ஆண்டு 30 மொழிகளில் இருந்து 305 திரைப்படங்களும் (28 பிரிவுகள்), 28 மொழிகளில் 148 ஆவணப் படங்களும் (22 பிரிவுகள்) தேசிய விருதுக்குப் போட்டியிட்டன.

அதன் விவரம்:

சிறந்த திரைப்படம் – சூரரைப்போற்று

சிறந்த திரைக்கதை – சூரரைப்போற்று

சிறந்த வசனம் – மண்டேலா

சிறந்த இயக்குநர் கே ஆர் சச்சிதானந்தன் (ஐயப்பனும் கோஷியும்) – மலையாளத் திரைப்படம்

சிறந்த அறிமுக இயக்குநருக்கான இந்திரா காந்தி விருது – மடோன் அஸ்வின் (மண்டேலா)

சிறந்த நடிகர் சூரியா – (சூரரைப்போற்று) & அஜய் தேவ்கன் (தானாஜி: தி அன்சங் வாரியர்)

சிறந்த நடிகை – அபர்ணா பாலமுரளி (சூரரைப்போற்று)

சிறந்த தமிழ் திரைப்படம் – சிவரஞ்சனியும் இன்னும் சில பெண்களும்

சிறந்த துணை நடிகர் – பிஜு மேனன் (ஐயப்பனும் கோஷியும்)

சிறந்த துணை நடிகை – லட்சுமிப்ரியா சந்திரமௌலி (சிவரஞ்சனியும் இன்னும் சில பெண்களும்)

சிறந்த இசையமைப்பாளர் – (பின்னணி இசை) ஜி வி பிரகாஷ்

சிறந்த இசையமைப்பாளர் – (பாடல்கள்) தமன் எஸ் (அலவைகுந்தபுரமுலு – தெலுங்கு திரைப்படம்)

சிறந்த படத்தொகுப்பு – ஸ்ரீகர் பிரசாத் (சிவரஞ்சனியும் இன்னும் சில பெண்களும்)

---

3. தேசியக்கொடியை இனி இரவிலும் பறக்கவிட அனுமதி: விதிகள் திருத்தம்

தேசியக்கொடியை இரவிலும் பறக்கவிட அனுமதிக்கும் வகையில், அதுதொடர்பான விதிகளில் நடுவணரசு திருத்தம் மேற்கொண்டுள்ளது.

நாட்டின் 75–ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, ஆகஸ்ட் 13 முதல் 15–ஆம் தேதி வரை வீடுகள்தோறும் தேசியக் கொடியை ஏற்றுமாறு மக்களுக்கு பிரதமர் மோடி வேண்டுகோள் விடுத்துள்ளார். இந்நிலையில், தேசியக்கொடி தொடர்பான விதிமுறைகளில் நடுவண் உள்துறை அமைச்சகம் திருத்தம் மேற்கொண்டுள்ளது.

இதுகுறித்து அனைத்து நடுவண் அமைச்சகங்கள், துறைகளுக்கு உள்துறைச் செயலகம் தெரிவித்துள்ளதாவது:

இந்திய தேசியக்கொடி ஏற்றப்படுதல், பயன்பாடு ஆகியவை கடந்த 2002–ஆம் ஆண்டின் இந்திய தேசியக்கொடி சட்டம் மற்றும் 1977–ஆம் ஆண்டின் தேசிய சின்னங்கள் அவமதிப்பு தடுப்புச்சட்டத்தால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

தேசியக்கொடியை பொதுமக்களின் வீட்டில் வெளிப்படையாக காட்சிப்படுத்தவும், அதனை பகல் மட்டுமன்றி இரவிலும் பறக்கவிடவும் அனுமதிக்கும் வகையில் இந்திய தேசியக்கொடி சட்டத்தில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதேபோல், கைகளால் நூற்கப்பட்ட தேசியக்கொடி மட்டுமன்றி எந்திரத்தால் ஆக்கப்பட்ட கொடிகளையும் பயன்படுத்தலாம். பருத்தி, பாலிஸ்டர், கம்பளி, காதி பட்டு ஆகியவற்றால் தயாரிக்கப்பட்ட கொடிகளாக அவை இருக்கலாம். இதற்குரிய விதிமுறை திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முந்தைய விதிமுறைகளின்படி, தேசியக்கொடியானது சூரிய உதயம் முதல் சூரிய அஸ்தமனம் வரை பறக்கவிட அனுமதி இருந்தது. இயந்திரத்தால் தயாரிக்கப்பட்ட மற்றும் பாலியஸ்டர் கொடிகள் அனுமதிக்கப்படாமல் இருந்தது குறிப்பிடத்தக்கது.

---

4. குரங்கு அம்மை சர்வதேச சுகாதார நெருக்கடி: உலக சுகாதார அமைப்பு அறிவிப்பு

குரங்கு அம்மை பாதிப்பு 70–க்கும் மேற்பட்ட நாடுகளில் பரவியுள்ள நிலையில், அதனை சர்வதேச சுகாதார நெருக்கடியாக உலக சுகாதார அமைப்பு அறிவித்தது. குரங்கு அம்மை பாதிப்புக்கான சிகிச்சை மற்றும் தடுப்பூசி பற்றாக்குறையை தடுக்க உலக அளவில் முதலீடுகளை அதிகரிக்கும் வகையில் இந்த அறிவிப்பை ஐநா சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ளது.

ஒரு நோய் பாதிப்பு மேலும் பல நாடுகளுக்கு பரவ வாய்ப்புள்ளது. அதனைத் தடுக்க உலக நாடுகளின் ஒருங்கிணை –ந்த முயற்சி அவசியம் என்பதை வலியுறுத்தவே 'சர்வதேச சுகாதார நெருக்கடி' நிலையை உலக சுகாதார அமைப்பு அறிவிக்கிறது. முன்னர், கரோனா பாதிப்பு, எபோலா மற்றும் ஜிகா வைரஸ் பாதிப்புகள் சர்வதேச சுகாதார நெருக்கடியாக உலக சுகாதார அமைப்பு அறிவித்தது.

---

1. சமீபத்தில், "சர்வதேச பொதுச்சுகாதார அவசரநிலை" என அறிவிக்கப்பட்டது எது?

அ. தக்காளி காய்ச்சல்

ஆ. குரங்கம்மை ☑

இ. பறவைக்காய்ச்சல்

ஈ. ஆப்பிரிக்க பன்றிக்காய்ச்சல்

✓ உலக நலவாழ்வு நிறுவனம் உலகளாவிய குரங்கம்மை பாதிப்பை, 'சர்வதேச பொதுச்சுகாதார அவசரநிலை' என அறிவித்துள்ளது. இந்த வகைப்பாடு, 'தொற்றுநோய்க்கு'ம் ஒருபடி கீழே உள்ளது. எழுபதுக்கும் மேற்பட்ட நாடுகளில் விரிவடைந்து வரும் குரங்கம்மை பாதிப்பானது தற்போது உலகளாவிய அவசரநிலையாக தகுதிபெற்றுள்ளதாக WHO கூறுகிறது.

2. ஒலிம்பிக் சாம்பியனான நீரஜ் சோப்ரா, 2022 உலக தடகள சாம்பியன்ஷிப்பில் எந்தப் பதக்கம் வென்றார்?

அ. தங்கம்

ஆ. வெள்ளி ☑

இ. வெண்கலம்

ஈ. மேற்கண்ட எதுவுமில்லை

✓ ஒலிம்பிக் சாம்பியனான நீரஜ் சோப்ரா, உலக சாம்பியன்ஷிப் போட்டிகளில் பதக்கம் வென்ற இரண்டாவது இந்தியர் என்ற பெருமையைப்பெற்றதன்மூலம் மற்றொரு வரலாற்றைப்படைத்துள்ளார். மூத்த நீளந்தாண்டுதல் வீராங்கனை அஞ்சு பாபி ஜார்ஜ் பதக்கம் வென்ற முதல் இந்தியர் என்பதால், நீரஜ் சோப்ரா முதல் தடகள வீரர் ஆனார். ஈட்டியெறிதல் இறுதிப்போட்டியில் நீரஜ் 88.13 மீ தூரம் எறிந்து வெள்ளிப்பதக்கம் வென்றார். நடப்புச்சாம்பியனான கிரெனடாவின் ஆண்டர்சன் பீட்டர்ஸ் 90.54 மீட்டர் தூரம் எறிந்து தங்கம் வென்றார்.

3. 68ஆவது தேசிய திரைப்பட விருதுகளில், 'சிறந்த திரைப்படமாக' அறிவிக்கப்பட்ட 'சூரரைப்போற்று' என்ற திரைப் படத்தில் நடித்த நடிகர் யார்?

அ. இரஜினிகாந்த்

ஆ. சிவகார்த்திகேயன்

இ. சூரியா ☑

ஈ. கமல்ஹாசன்

✓ 68ஆவது தேசிய திரைப்பட விருதுகளின் வெற்றியாளர்கள் தில்லியில் அறிவிக்கப்பட்டனர். மதிப்புமிக்க விருதுகள் இந்திய அரசின் திரைப்பட விழா இயக்குநரகத்தால் நிர்வகிக்கப்படுகின்றன. இந்த ஆண்டு, 'சிறந்த திரைப்படம்' விருது தமிழ் திரைப்படமான சூரரைப்போற்றுக்கு வழங்கப்பட்டது; அதன் நடிகர் சூர்யா மற்றும் அபர்ணா பாலமுரளி இரு விருதுகளை வென்றனர். சிறந்த நடிகருக்கான விருதை தன்ஹாஜி படத்திற்காக அஜய் தேவ்கனும் பகிர்ந்து கொண்டார். மலையாளத்தில் வெளியான, 'ஐயப்பனும் கோஷியும்' திரைப்படம் சிறந்த இயக்குநர் உட்பட பல்வேறு விருதுகளைப் பெற்றது.

4. சமீபத்தில் இ–FIR அமைப்பை அறிமுகப்படுத்திய மாநில காவல்துறை எது?

அ. இராஜஸ்தான்

ஆ. குஜராத் ☑

இ. பஞ்சாப்

ஈ. ஒடிஸா

✓ நடுவண் உள்துறை அமைச்சர் அமித்ஷா, குஜராத் மாநில காவற்துறையின் இ–FIR அமைப்பை காந்திநகரில் தொடங்கிவைத்தார். இந்த அமைப்பு, குடிமக்கள், காவல் நிலையங்களுக்குச் செல்லாமல் இணைய முறையில் FIR பதிவுசெய்ய உதவும். குஜராத் மாநில காவல்துறையின் அனைத்து முக்கிய சேவைகளும் இணைய வழியில் கிடைக்கப்பெறும். FIR பதிவு செய்த 48 ம நேரத்திற்குள், புகார்தாரரை காவல்துறை நேரடியாக தொடர்புகொள்ளும்.

5. நாட்டிலேயே முதல், 'ஹர் கர் ஜல்' சான்றிதழ்பெற்ற மாவட்டமாக அறிவிக்கப்பட்ட புர்ஹான்பூர் அமைந்துள்ள மாநிலம் எது?

அ. தெலுங்கானா

ஆ. மத்திய பிரதேசம் ☑

இ. பீகார்

ஈ. கொல்கத்தா



✓ மத்திய பிரதேசத்தில் அமைந்துள்ள புர்ஹான்பூர் மாவட்டம் நாட்டிலேயே முதல், 'ஹர் கர் ஜல்' சான்றிதழ் பெற்ற மாவட்டமாகும். இது, 'தக்கின் தர்வாசா' என்றும் அழைக்கப்படுகிறது. 2019–இல், 'ஜல் ஜீவன் மிஷன்' தொடங்கப்பட்ட பிறகு, பஞ்சாயத்து பிரதிநிதிகள், பானி சமிதிகள் மற்றும் புர்ஹான்பூரின் மாவட்ட அதிகாரிகள் அதன் அனைத்து 1,01,905 கிராமப்புற வீடுகளுக்கும் 34 மாதங்களுக்குள் குழாய் நீர் இணைப்புகளைப் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர்.

6. பன்னாட்டு செலவாணி நிதியத்தின், 'முன்னாள் தலைமை பொருளாதார நிபுணர்களின் குழுமத்தில்' இடம்பெற்ற முதல் பெண்மணி யார்?

அ. ஜெயதி கோஷ்

ஆ. அருந்ததி பட்டாச்சார்யா

இ. கீதா கோபிநாத் ☑

ஈ. அருணிமா சின்ஹா

✓ பன்னாட்டு செலவாணி நிதியத்தின் (IMF) முதல் துணை நிர்வாக இயக்குநர் கீதா கோபிநாத், IMF–இன், 'முன்னாள் தலைமை பொருளாதார நிபுணர்களின் குழுமத்தில்' இடம்பெற்ற முதல் பெண் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். 2003 மற்றும் 2006–க்கு இடையில் IMF–இன் தலைமை பொருளாதார நிபுணராகவும், ஆராய்ச்சி இயக்குநராகவும் அவர் பணியாற்றியுள்ளார். இரகுராம் இராஜனுக்குப் பிறகு இந்தச் சாதனையை நிகழ்த்திய இரண்டாவது இந்தியர் ஆவார் இவர்.

7. நடுவண் சாலைப் போக்குவரத்து அமைச்சகமானது உத்தரபிரதேச மாநிலத்தில் உள்ள ஜெவார் பன்னாட்டு வானூர்தி நிலையத்திற்கும் கீழ்க்காணும் எந்த மாநிலத்திற்கும் இடையே கிரீன்ஃபீல்ட் இணைப்பை உருவாக்க ஒப்புதல் அளித்துள்ளது?

அ. பீகார்

ஆ. ஹரியானா ☑

இ. குஜராத்

ஈ. உத்தரகாண்ட்

Noida International Airport

✓ நடுவண் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் நிதின் கட்கரி, ஹரியானாவுக்கும் உத்தர பிரதேச மாநிலத்தின் ஜெவார் பன்னாட்டு வானூர்தி நிலையத்திற்கும் இடையே கிரீன்ஃபீல்ட் இணைப்பை உருவாக்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக அறிவித்தார். இந்தத் திட்டத்திற்கான செலவு மதிப்பீடு மொத்தம் ₹2,414.67 கோடியாகும். இந்த வானூர்தி நிலையம் தில்லி–மும்பை விரைவுச்சாலையை இணைக்கும்.

8. 'ஸ்த்ரீ நிதி' என்பது எந்த மாநிலம்/யூனியன் பிரதேசத்துடன் தொடர்புடைய திட்டமாகும்?

அ. ஆந்திர பிரதேசம்

ஆ. தெலுங்கானா ☑

இ. கேரளா

ஈ. கர்நாடகா

✓ தெலுங்கானா மாநில அரசு, 'ஸ்திரீ நிதி' மூலம் மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு சுமார் ₹3700 கோடி கடன் வழங்கி உள்ளது. இது கடந்த ஆண்டு ஒதுக்கீட்டைவிட சுமார் ₹600 கோடி அதிகம். அதிகாரபூர்வ அறிவிப்பின்படி, கடந்த 8 ஆண்டுகளில் சுமார் ₹14,750 கோடியை சுய உதவிக்குழுக்களுக்கு தொழில்களை அமைப்பதற்காக தெலுங்கானா மாநில அரசாங்கம் செலவிட்டுள்ளது.

9. 'தேசிய மீன் விவசாயிகள் நாள்' கொண்டாடப்படுகிற தேதி எது?

அ. ஜூலை.06

ஆ. ஜூலை.08

இ. ஜூலை.10 ☑

ஈ. ஜூலை.25

✓ நாடு முழுவதுமுள்ள மீனவர்கள் மற்றும் மீன் விவசாயிகளுக்கிடையேயான ஒற்றுமையை வெளிப்படுத்தும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் ஜூலை.10 அன்று தேசிய மீன் விவசாயிகள் நாள் கொண்டாடப்படுகிறது. நாடு முழுவதும் 2022 ஜூலை.10 அன்று 65ஆவது தேசிய மீன் விவசாயிகள் நாள் கொண்டாடப்பட்டது.

✓ நாட்டில் முதன்முறையாக கடந்த 1957 ஜூலை.10ஆம் தேதி அன்று, பெரிய கெண்டை மீன்களின் தூண்டப்பட்ட இனப்பெருக்கத்தை அடைவதில் பேராசிரியர் Dr ஹிராலால் சௌத்ரி மற்றும் அவரது சக ஊழியர்களின் பங்களிப்பை நினைவுகூரும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.

10. 'சீ கார்டியன்ஸ்-2' என்பது கீழ்க்காணும் எந்த இரு நாடுகளால் நடத்தப்படும் கூட்டு கடல்சார் பயிற்சியாகும்?

அ. அமெரிக்கா-பாகிஸ்தான்

ஆ. சீனா-பாகிஸ்தான் ☑

இ. இந்தியா-பாகிஸ்தான்

ஈ. இலங்கை-பாகிஸ்தான்

✓ 'சீ கார்டியன்ஸ்-2' என்ற கூட்டு கடல்சார் பயிற்சிக் குறியீட்டின் ஒரு பகுதியாக, சீனா மற்றும் பாகிஸ்தான் கடற்படைகள் ஷாங்காய் கடற்கரையில் நேரடி துப்பாக்கிச்சூடு பயிற்சியைத் தொடங்கின. கடல்சார் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை கூட்டாக சமாளிக்க கடற்படையினர் தங்களது புதிய உயர்தொழில்நுட்ப கடற்படைக் கப்பல்கள் மற்றும் போர் விமானங்களை இந்தப் பயிற்சியில் ஈடுபடுத்தவுள்ளனர்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. மத்திய பிரதேசத்தில் நிகழாண்டு 27 புலிகள் இறப்பு: நாட்டிலேயே அதிகம்

'புலிகள் மாநிலம்' என்று அறியப்படும் மத்திய பிரதேசத்தில் நிகழாண்டு 27 புலிகள் இறந்துள்ளன. ஒட்டுமொத்தமாக நாட்டில் 74 புலிகள் இறந்துள்ளன. தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தின் வலைதளத்தில் வெளியிடப்பட்ட தகவல்களில் இந்த விவரங்கள் இடம்பெற்றுள்ளன.

அதன்படி, நிகழாண்டு தொடக்கம் முதல் ஜூலை 15 வரையிலான காலகட்டத்தில், நாடு முழுவதும் 74 புலிகளின் இறப்பு பதிவாகியுள்ளது. அதிகபட்சமாக, மத்திய பிரதேசத்தில் 27 புலிகள் இறந்துள்ளன.

மகாராஷ்டிரத்தில் 15, கர்நாடகத்தில் 11, அஸ்ஸாம் 5, கேரளம், இராஜஸ்தானில் தலா 4, உத்தர பிரதேசத்தில் 3, ஆந்திர பிரதேசத்தில் 2, பிகார், ஒடிஸா, சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களில் தலா 1 என்ற எண்ணிக்கையில் புலிகள் இறப்பு பதிவாகியிருக்கிறது. புலிகளுக்கு இடையே நடக்கும் சண்டை, வயது மூப்பு, நோய்கள், வேட்டை, மின் வேலியில் சிக்குவது போன்றவை புலிகள் இறப்புக்கு முக்கிய காரணங்களாக உள்ளன.

கடந்த 2018–ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, நாட்டிலேயே அதிக எண்ணிக்கையிலான புலிகளைக் கொண்ட மாநிலமாக மத்திய பிரதேசம் உள்ளது. அங்கு 526 புலிகள் உள்ளன. கன்ஹா, பாந்தவ்கர், பெஞ்ச், சாத்புரா, பன்னா, சஞ்சை துப்ரி ஆகிய 6 புலிகள் காப்பகங்கள் உள்ளன.

1. 'இந்தியாவின் உயிரி பொருளாதார அறிக்கை – 2022'ஐ வெளியிட்ட நடுவண் அமைச்சகம் எது?

அ. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் ☑

ஆ. சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம்

இ. உழவு மற்றும் உழவர்கள் நல அமைச்சகம்

ஈ. எரிசக்தி அமைச்சகம்

✓ 'இந்தியாவின் உயிரி பொருளாதார அறிக்கை – 2022'ஐ வெளியிட்ட டாக்டர் ஜிதேந்திர சிங், 2021ஆம் ஆண்டில் இந்தியாவின் உயிரி பொருளாதாரம் $80 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டியுள்ளது என்று சுட்டிக்காட்டினார். 2020இல் $70.2 பில்லியன் டாலர்களைவிட 14.1% வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது. 2025இல் $150 பில்லியன் டாலராகவும், 2030இல் $300 பில்லியன் டாலராகவும் அது இருக்கும் என்று அவர் கூறினார்.

2. முகவழி ஆதார் எண்ணை அங்கீகரிப்பதற்காக UIDAI அறிமுகப்படுத்திய புதிய செயலியின் பெயர் என்ன?

அ. Aadhaar Face RD ☑

ஆ. UIDAI Facetime

இ. Aadhar Authenticate

ஈ. Digi-Aadhar

✓ இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (UIDAI) ஆதார் அட்டை வைத்திருப்போரின் முகத்தைப் பயன்படுத்தி அவர்களின் தனித்துவமான 12 இலக்க அடையாள எண்ணை அங்கீகரிப்பதற்காக, 'ஆதார் ஃபேஸ் RD' செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது. அங்கீகார நோக்கத்திற்காக ஆதார் அட்டை வைத்திருப்பவர்களின் முகத்தை பயன்படுத்த ஆதார் அங்கீகார பயனர் முகமைகளை UIDAI செயல்படுத்தியது. ஃபேஸ் அதெண்டிகேஷன் டெக்னாலஜியைப் பயன்படுத்தி அங்கீகாரத்திற்காக நபரின் முகம் படம்பிடிக்கப்படுகிறது.

3. 'Family Doctor' என்ற முன்னோடித் திட்டத்துடன் தொடர்புடைய மாநிலம் எது?

அ. தமிழ்நாடு

ஆ. கேரளா

இ. ஆந்திர பிரதேசம் ☑

ஈ. கர்நாடகா

✓ ஆந்திர பிரதேச மாநிலம் விசாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள பத்மநாபம் மண்டலத்தில், 'குடும்ப மருத்துவர்' திட்டத்தை சோதனை முயற்சியாக செயல்படுத்த அம்மாநில அரசு தேர்வுசெய்துள்ளது. இத்திட்டத்தின்கீழ், மருத்துவ மற்றும் சுகாதாரப்பணியாளர்கள் 'ஆரோக்யஸ்ரீ' பயனாளிகள் மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்ட ஒரு வாரகாலத்திற்குப் பிறகு அவர்களைச் சந்தித்து அவர்களின் உடல்நிலை குறித்து விசாரித்து கருத்துகளைப் பெற வேண்டும்.

4. 'வென்டியன் – Wentian' என்ற தனது விண்வெளி நிலைய தொகுதியை வெற்றிகரமாக ஏவிய நாடு எது?

அ. ரஷ்யா

ஆ. இஸ்ரேல்

இ. சீனா ☑

ஈ. ஐக்கிய அரபு அமீரகம்

- ✓ சீனா வென்டியன் என அழைக்கப்படும் தனது இரண்டாவது தொகுதியை அண்மையில் டியாங்காங் விண்வெளி நிலையத்திற்கு வெற்றிகரமாக ஏவியது. சீனாவின் ஹைனானில் இருந்து லாங் மார்ச் – 5பி ஏவுகலத்தின் மூலம் டியாங்காங் விண்வெளி நிலையத்திற்கு வெண்டியன் ஏவப்பட்டது. தைகோனாட்ஸ் என்றும் அழைக்கப்படும் சீன விண்வெளி வீரர்கள் பல்வேறு அறிவியல் சோதனைகளை மேற்கொள்ள அனுமதிக்கும் உபகரணங்களை இந்தத் தொகுதி தன்னகத்தே கொண்டுள்ளது.

5. மாவட்ட காலநிலை மாற்ற பணிகளை நிறுவியுள்ள இந்திய மாநிலம் எது?

அ. தமிழ்நாடு ☑

ஆ. ஹிமாச்சல பிரதேசம்

இ. அஸ்ஸாம்

ஈ. குஜராத்

- ✓ தமிழ்நாடு அரசானது சமீபத்தில் மாநிலத்தில் உள்ள 38 மாவட்டங்களில் மாவட்ட காலநிலை மாற்ற இயக்கங்களை (DCCM) நிறுவியுள்ளது. DCCM–களுக்கு மாவட்ட ஆட்சியர்கள் 'திட்ட இயக்குநர்கள்' ஆகவும், மாவட்ட வன அலுவலர் –கள் 'காலநிலை அதிகாரிகளாக'வும் செயல்படுவார்கள். மாவட்ட ஆட்சியர்கள் மாவட்ட அளவிலான காலநிலை மாற்றம் தணிப்பு & தகவமைத் திட்டங்களை தயாரித்து, காலநிலை நெகிழ்திறன்மிக்க வளர்ச்சித் திட்டங்களுக்கான உள்ளீடுகளை வழங்குவார்கள்.

6. ஒவ்வோர் ஆண்டும், 'உலக மக்கள்தொகை நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ. ஜூலை.11 ☑

ஆ. ஜூலை.09

இ. ஜூலை.10

ஈ. ஜூலை.12

- ✓ உலக மக்கள்தொகை நாளானது ஒவ்வோர் ஆண்டும் ஜூலை.11 அன்று அனுசரிக்கப்படுகிறது. "A world of 8 billion: Towards a resilient future for all – Harnessing opportunities and ensuring rights and choices for all" என்பது நடப்பு 2022ஆம் ஆண்டில் வரும் உலக மக்கள்தொகை நாளுக்கானக் கருப்பொருள் ஆகும். அதிகரிக்கும் மக்கள்தொகைப் பிரச்சினைகள் குறித்து கவனஞ்செலுத்துவதற்காக, 90–க்கும் மேற்பட்ட நாடுகளில் 1990ஆம் ஆண்டு ஜூலை.11ஆம் தேதி முதன்முதலில் இந்த நாள் கடைப்பிடிக்கப்பட்டது.

7. ஜூட் மார்க் இந்தியா (JMI) திட்டத்தின் திட்டக்காலம் மற்றும் செலவினம் என்ன?

அ. FY 2021- 25; ரூ.485.58 கோடி

ஆ. FY 2022- 26; ரூ.485.58 கோடி ☑

இ. FY 2021- 25; ரூ.48.58 கோடி

ஈ. FY 2022- 26; ரூ.48.58 கோடி

- ✓ 'சணல் மார்க் இந்தியா' இலச்சினையை வெளியிட்டதன்மூலம் சணல் பொருட்களுக்கான நம்பகத்தன்மைக்கான சான்றிதழை அரசாங்கம் அறிமுகப்படுத்தியது. இது இந்திய சணல் தயாரிப்புகளை ஊக்குவிக்கும் முயற்சியாகும். 2022 நிதியாண்டு மற்றும் 2026 நிதியாண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் சணல் துறையின் மேம்பாடு மற்றும் ஊக்குவிப்புக்கான திட்டத்தின்கீழ் JMI செயல்படுத்தப்பட்டது. இதற்கான மொத்த நிதி ₹485.58 கோடி ஆகும்.

- ✓ ஒவ்வொரு ஜூட் மார்க் லேபிளும் தயாரிப்பாளர் குறித்த முழு தகவலுடன் ஒரு தனித்துவமான QR குறியீட்டைக் கொண்டிருக்கும். தேசிய சணல் வாரியம் என்பது மத்திய ஜவுளி அமைச்சகத்தின் மைய முகமை ஆகும்; இது சணல் மற்றும் சணல் பொருட்களை மேம்படுத்துவதற்கு பொறுப்புடைய நிறுவனமாகும்.

8. 2022 காமன்வெல்த் விளையாட்டுப்போட்டியில் இந்திய பெண்கள் கிரிக்கெட் அணியின் அணித்தலைவியாக நியமிக்கப்பட்டவர் யார்?

அ. ஹர்மன்ப்ரீத் கௌர் ☑

ஆ. ஸ்மிருதி மந்தனா

இ. மிதாலி ராஜ்

ஈ. ஜூலன் கோஸ்வாமி

✓ 2022ஆம் ஆண்டு பர்மிங்காமில் நடைபெறவுள்ள காமன்வெல்த் போட்டியில் விளையாடவுள்ள இந்திய பெண்கள் அணியின் அணித்தலைவியாக ஹர்மன்ப்ரீத் கௌர் நியமிக்கப்பட்டுள்ளார். தொடக்க ஆட்டக்காரர் ஸ்மிருதி மந்தனா அணியின் துணைத்தலைவியாக நியமிக்கப்பட்டார். 1998ஆம் ஆண்டு கோலாலம்பூர் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் ஆடவர் ஒருநாள் போட்டிகள் நடைபெற்ற பிறகு, பெண்கள் T20 கிரிக்கெட் காமன்வெல்த் போட்டிகளில் பங்கேற்பது இதுவே முதல் முறை.

9. ஆசிய U–20 மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டிகள் நடைபெற்ற நாடு எது?

அ. கஜகஸ்தான்

ஆ. பஹ்ரைன் ☑

இ. மங்கோலியா

ஈ. சீனா

✓ பஹ்ரைனின் மனாமாவில் நடைபெற்ற ஆசிய U–20 மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் U–20 மல்யுத்த அணி 4 தங்கம் உட்பட 22 பதக்கங்களை வென்றது. இந்தப் போட்டியில் இந்தியா ஒன்பது வெள்ளி மற்றும் ஒன்பது வெண்கலப் பதக்கங்களையும் வென்றது. 22 பதக்கங்களில், பெண்கள் அணி மூன்று தங்கப்பதக்கங்கள் உட்பட பத்துப்பதக்கங்களை வென்றது. U–15 ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய வீரர்கள் எட்டுப் பதக்கங்களை வென்றனர்.

10. 'சர்வதேச மலாலா நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ. ஜூலை.12 ☑

ஆ. ஜூலை.15

இ. ஜூலை.25

ஈ. ஜூலை.26

✓ உலகெங்கிலும் உள்ள பெண்களின் கல்வி உரிமைக்காக பாடுபடும் நோபல் பரிசு பெற்ற மலாலா யூசுப்சாயை கௌரவிக்கும் வகையில், ஒவ்வோர் ஆண்டும் ஜூலை.12ஆம் தேதி 'சர்வதேச மலாலா நாள்' அனுசரிக்கப்படுகிறது. 2012ஆம் ஆண்டு பெண் குழந்தைகளின் கல்விக்காக பிரச்சாரம் செய்ததற்காக மலாலா தலிபான்களால் சுடப்பட்டார்.

✓ மலாலாவும் அவரது தந்தையும் இணைந்து மலாலா நிதியத்தை நிறுவினர்; அது பெண்களின் கல்வியை ஆதரிக்கும் ஒரு தளமாகும். 2014ஆம் ஆண்டில், மலாலா அமைதிக்கான நோபல் பரிசைப்பெற்றார் மற்றும் அப்பரிசைப்பெறும் மிக இளையவர் என்ற பெருமையையும் அவர் பெற்றார். அவர் 2017இல் ஐநா அமைதி தூதராக நியமிக்கப்பட்டார்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. தமிழ்நாட்டில் 3 இடங்கள் உட்பட 5 இடங்களை சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த சதுப்பு நிலங்களாக இந்தியா அறிவித்துள்ளது

தமிழ்நாட்டில் கரிக்கிளி பறவைகள் சரணாலயம் பள்ளிக்கரனை சதுப்புநிலக்காடு, பிச்சாவரம் சதுப்புநிலக்காடு ஆகியவை உட்பட 5 இடங்களை, 'ராம்சர்' எனப்படும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த புதிய இடங்களாக இந்தியா அறிவித்துள்ளது. மிசோரமில் பாலா சதுப்புநிலம், மத்திய பிரதேசத்தில் சாக்கிய சாகர் சதுப்புநிலம் ஆகியவை மற்ற 2 புதிய இடங்களாகும். இத்துடன் 'ராம்சர்' இடங்களின் எண்ணிக்கை 49–லிருந்து 54–ஆக அதிகரித்துள்ளது.

---

2. குடியரசுத்தலைவருக்கான அதிகாரங்கள்

இந்திய நாட்டின் பதினைந்தாவது குடியரசுத்தலைவராக திரௌபதி முர்மு பொறுப்பேற்றுள்ள நிலையில், குடியரசுத் தலைவருக்கான அதிகாரங்கள் குறித்த பார்வை:

நாட்டின் தலைவர்

அரசமைப்புச் சட்டத்தின் பாதுகாவலர்

முப்படைகளின் தலைவர்

நாட்டின் முதல் குடிமகன்

நிர்வாக அதிகாரங்கள்

பிரதமரையும் மற்ற அமைச்சர்களையும் நியமிக்கும் அதிகாரம்.

அரசின் அனைத்து நடவடிக்கைகளும் குடியரசுத்தலைவரின் பெயரிலேயே மேற்கொள்ளப்படும்.

நடுவணரசின் தலைமை வழக்குரைஞரை (அட்டர்னி ஜெனரல்) நியமிக்கும் அதிகாரம்.

தலைமை கணக்குத்தணிக்கையாளர், தலைமைத் தேர்தல் ஆணையர், மற்ற ஆணையர்கள், மத்திய பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரம்.

மாநிலங்களின் ஆளுநர்களை குடியரசுத்தலைவரே நியமிப்பார்.

நாட்டில் உள்ள யூனியன் பிரதேசங்களை குடியரசுத்தலைவரால் நியமிக்கப்படும் நிர்வாகிகளே நிர்வகிப்பர்.

அரசாங்கம் சார்ந்த எந்தவொரு தகவலையும் பிரதமரிடமிருந்து கோர முடியும்.

நாட்டின் எந்தப் பகுதியையும் பழங்குடியின, பட்டியலினப் பகுதியாக அறிவித்து, அவற்றை நிர்வகிக்கும் அதிகாரம்.

அமைச்சரவையின் முடிவுகளை மறுபரிசீலனை செய்யுமாறு கூறும் அதிகாரம்.

சட்டம்சார்ந்த அதிகாரங்கள்

இந்திய நாடாளுமன்றம் குடியரசுத்தலைவரையும் உள்ளடக்கியது.

குடியரசுத்தலைவர் ஒப்புதல் அளித்தால் மட்டுமே நாடாளுமன்றம் நிறைவேற்றும் மசோதாக்கள் சட்டவடிவு பெறும்.

நாடாளுமன்ற கூட்டத்தொடரை நடத்துவதற்கான அழைப்புவிடுக்கும் அதிகாரம்; முடித்துவைக்கும் அதிகாரம்.

நாடாளுமன்ற கூட்டத்தொடர் நடைபெறாத சமயங்களில் அவசரச்சட்டங்களைப் பிறப்பிக்கும் உரிமை.

மக்களவை, மாநிலங்களவையின் கூட்டுக்கூட்டத்துக்கு அழைப்புவிடுக்கும் அதிகாரம்.

ஆண்டின் முதல் கூட்டத்தொடரின் முதல்நாளிலும், புதிய அரசு பதவியேற்ற பிறகு நடைபெறும் முதல் கூட்டத் தொடரிலும் குடியரசுத்தலைவர் சிறப்பு உரையாற்றுவார்.

மாநிலங்களவைக்கு 12 நியமன உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரம்.

மக்களவையைக் கலைக்கும் அதிகாரம்.

எம்.பி–க்களின் பதவிநீக்கம் குறித்து இந்திய தேர்தல் ஆணையத்துடன் கலந்தாலோசித்து முடிவெடுக்கும் அதிகாரம்.

நாடாளுமன்றம் நிறைவேற்றும் மசோதாக்களைத் திருப்பி அனுப்பவும், காத்திருப்பில் வைக்கவும் அதிகாரம்.

மத்திய பணியாளர் தேர்வாணையம், நிதிக்குழுவின் ஆண்டறிக்கைகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் அதிகாரம்.

மாநில ஆளுநர்கள் அனுப்பிவைக்கும் மாநில மசோதாக்களை எவ்வளவு காலத்துக்கு வேண்டுமானாலும் குடியரசுத் தலைவர் காத்திருப்பில் வைக்கலாம்.

நிதிசார் அதிகாரங்கள்

பண மசோதாக்களை குடியரசுத்தலைவரின் ஒப்புதலின்றி தாக்கல் செய்ய முடியாது.

குடியரசுத்தலைவரின் பெயரிலேயே நிதிநிலை அறிக்கை (பட்ஜெட்) தாக்கல் செய்யப்படுகிறது.

அவசரகால நிதியில் இருந்து நிதியை விடுவிக்கும் அதிகாரம்.

5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நிதிக்குழுவை நியமிக்கும் அதிகாரம்.

நீதிசார் அதிகாரங்கள்

உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி, மற்ற நீதிபதிகள், உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோரை குடியரசுத்தலைவரே நியமிப்பார்.

குறிப்பிட்ட சட்டம் தொடர்பான கருத்துகளை உச்சநீதிமன்றத்திடம் கோரும் அதிகாரம்.

நீதிமன்றங்களால் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்கவும், தண்டனையைக் குறைக்கவும் குடியரசுத்தலைவருக்கு அதிகாரம் உண்டு.

பாதுகாப்புசார் அதிகாரங்கள்

இராணுவ தலைமைத் தளபதி, கடற்படை தலைமைத் தளபதி, விமானப்படை தலைமைத்தளபதி ஆகியோரை நியமிக்கும் அதிகாரம்.

எந்தவொரு நாட்டின் மீதும் போர்தொடுக்க உத்தரவிடும் அதிகாரம்.

நெருக்கடிநிலை அதிகாரங்கள்

நாடு முழுவதுமோ அல்லது குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமோ நெருக்கடி நிலையை அமல்படுத்தும் அதிகாரம்.

மாநிலங்களில் குடியரசுத்தலைவர் ஆட்சியை அமல்படுத்தும் அதிகாரம்.

நிதிசார் நெருக்கடியை அமல்படுத்தும் அதிகாரம்.

கட்டுப்பாட்டுக்கு உள்பட்டவை

குடியரசுத் தலைவருக்குப் பல்வேறு அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தாலும், அவை அனைத்தையும் தன்னிச்சையாக அவர் செயல்படுத்த முடியாது. பெரும்பாலான அதிகாரங்களை மத்திய அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்ற பிறகே அவரால் செயல்படுத்த முடியும். மத்திய அமைச்சரவையின் அறிவுரைப்படியே செயல்பட வேண்டுமென அரசமைப்புச் சட்டம் குடியரசுத்தலைவருக்குக் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

பதவி விலகலும் தகுதிநீக்கமும்:

குடியரசுத்தலைவர் பதவிவிலக விரும்பினால், இராஜிநாமா கடிதத்தை குடியரசு துணைத்தலைவரிடம் வழங்க வேண்டும்.

குடியரசுத்தலைவரை தகுதிநீக்கம் செய்வதற்கு, நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்.

---

3. மூன்று வேட்டைத்தடுப்புக் காவலர்களுக்கு விருது

நீலகிரி மாவட்டத்தில் 'T–23' எனப் பெயரிடப்பட்ட புலியை உயிருடன் பிடிப்பதில் சிறப்பாகப் பணியாற்றிய மூன்று வேட்டைத் தடுப்புக் காவலர்களுக்கு தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம் விருது அறிவித்துள்ளது.

நீலகிரி மாவட்டம், முதுமலை புலிகள் காப்பகத்துக்குட்பட்ட மசினகுடி வனப்பகுதியில் 'T–23' எனப் பெயரிடப்பட்ட புலி அப்பகுதியைச் சேர்ந்த 4 பேரையும், 20–க்கும் மேற்பட்ட கால்நடைகளையும் கொன்றது. அப்புலி 2021–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் மயக்க ஊசி செலுத்தி பிடிக்கப்பட்டு, கர்நாடகம் மைசூரில் உள்ள புலிகள் மறுவாழ்வு மையத்தில் வைத்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

இப்புலியைப் பிடிப்பதில் சிறப்பாகப் பணியாற்ற வேட்டைத் தடுப்புக் காவலர்கள் மூன்று பேருக்கு தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம் வெகுமதியுடன் கூடிய விருதை அறிவித்துள்ளது.

இதுகுறித்து வனத்துறை அதிகாரிகள் கூறுகையில், முதுமலை புலிகள் காப்பகத்தில் வேட்டைத் தடுப்புக் காவலர்களாகப் பணியாற்றும் பொம்மன், மாதன், மீனா காளன் ஆகிய மூவரும் 'T–23' புலியின் நடமாட்டத்தை நாள்தோறும் கவனித்து அளித்த தகவலின் அடிப்படையிலேயே அப்புலியை உயிருடன் பிடிக்க முடிந்தது. மூவரின் கடின உழைப்பை அங்கீகரிக்கும் வகையில் தமிழக வனத்துறையால் தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தின் விருதுக்காக பரிந்துரைக்கப்பட்டது. இதையேற்று தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம் மூவருக்கும் வெகுமதியுடன் கூடிய விருதை அறிவித்துள்ளது.

உலக புலிகள் நாளையொட்டி, மகாராஷ்டிர மாநிலம் சந்தரபூரில் உள்ள வனக்கல்லூரியில் வெள்ளிக்கிழமை (ஜூலை 29) நடைபெறும் விழாவில் அவர்களுக்கு விருது வழங்கப்படும்.

---

1. அனைத்து மகளிர் கூட்டுறவு வங்கியை அமைப்பதற்காக தெலுங்கானாவுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள மாநிலம் எது?

அ. ஆந்திர பிரதேசம்

ஆ. இராஜஸ்தான் ☑

இ. கர்நாடகா

ஈ. பஞ்சாப்

✓ தெலுங்கானா மாநில அரசாங்கத்தின் ஸ்திரீ நிதி கடன் கூட்டுறவு கூட்டமைப்புடனான இராஜஸ்தான் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. தெலுங்கானா மாநிலத்தின் ஸ்திரீ நிதி மாதிரியில், ராஜஸ்தானில் முதல் அனைத்து மகளிர் கூட்டுறவு வங்கியை அமைப்பதே இதன் நோக்கம். 'இராஜஸ்தான் மகிளா நிதி' நிதியமானது சுய–உதவிக் குழுக்களில் உள்ள பெண்களுக்காக மட்டும் மகளிர் சுய உதவிக்குழுக்களால் இயக்கப்படுகிறது.

2. குஜராத் மாநிலத்தில் நடைபெறும் 36ஆவது தேசிய விளையாட்டு – 2022இல் இடம்பெறுகிற விலங்கு எது?

அ. காண்டாமிருகம்

ஆ. சிங்கம் ☑

இ. புலி

ஈ. யானை

✓ 2022ஆம் ஆண்டு செப்.27 முதல் அக்.10ஆம் தேதி வரை 36ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்த குஜராத் மாநிலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தேசிய விளையாட்டுப் போட்டிகளின் கடைசிப் பதிப்பு 2015ஆம் ஆண்டு கேரளாவில் நடத்தப்பட்டது. கிர் சிங்கம் மற்றும் சர்தார் வல்லபாய் படேலின் ஒற்றுமை சிலை ஆகியவை இதன் இலச்சினையில் காணப்படுகின்றன. இந்திய ஒலிம்பிக் சங்கமானது ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு போட்டியை நடத்துவதற்கான குஜராத் மாநிலத்தின் முன்மொழிவை ஏற்றுக்கொண்டது.

3. பாலஸ்தீன அகதிகளுக்கான ஐநா பிரிவின் (UNRWA) தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?

அ. ஜெனீவா

ஆ. பாரிஸ்

இ. அம்மான் மற்றும் காசா ☑

ஈ. ஏருசலேம்

✓ பாலஸ்தீன அகதிகளுக்கான ஐநா பிரிவின் (UNRWA) தலைமையகம் பாலஸ்தீனிய ஆணையத்தின் அம்மான், ஜோர்டான் மற்றும் காசாவில் உள்ளது. இது 1949இல் நிறுவப்பட்டது. பாலஸ்தீனிய அகதிகளின் நிவாரணம் மற்றும் மனித வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் இந்த ஐநா பிரிவிற்கு இந்தியா சமீபத்தில் $2.5 மில்லியன் அமெரிக்க டாலர்களை வழங்கியது. 2018 முதல், இந்திய அரசு, UNRWA–க்கு $20 மில்லியன் அமெரிக்க டாலர்களை வழங்கியுள்ளது.

4. உலக வங்கியின் தலைமைப் பொருளாதார நிபுணராக நியமிக்கப்பட்டுள்ள இந்தியப் பொருளாதார நிபுணர் யார்?

அ. இரகுராம் இராஜன்

ஆ. உர்ஜித் படேல்

இ. இண்டர்மிட் கில் ☑

ஈ. விரால் ஆச்சார்யா

✓ உலக வங்கியானது இண்டர்மிட் கில்லை தலைமைப் பொருளாதார நிபுணராகவும், வளர்ச்சிப் பொருளாதாரத்திற்கான மூத்த துணைத் தலைவராகவும் நியமித்துள்ளது. கௌசிக் பாசுவுக்குப் பிறகு, உலக வங்கியின் தலைமைப் பொருளாதார நிபுணரான இரண்டாவது இந்தியர் இண்டர்மிட் கில் ஆவார். இது நடுத்தர மற்றும் குறைந்த வருமானம் கொண்ட நாடுகளுக்கு கடன் வழங்கும் ஒரு சர்வதேச நிதி நிறுவனம் ஆகும்.

5. பள்ளிக்கரணை சதுப்புநிலம் மற்றும் பிச்சாவரம் சதுப்புநிலம் ஆகியவை அமைந்துள்ள மாநிலம் எது?

அ. தமிழ்நாடு ☑

ஆ. ஹிமாச்சல பிரதேசம்

இ. அஸ்ஸாம்

ஈ. குஜராத்

Ramsar
Convention on Wetlands

✓ தமிழ்நாட்டில் கரிக்கிளி பறவைகள் சரணாலயம் பள்ளிக்கரனை சதுப்புநிலக்காடு, பிச்சாவரம் சதுப்புநிலக்காடு ஆகியவை உட்பட 5 இடங்களை, ராம்சர் எனப்படும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த புதிய இடங்களாக இந்தியா அறிவித்துள்ளது. மிசோரமில் பாலா சதுப்புநிலம், மத்திய பிரதேசத்தில் சாக்கிய சாகர் சதுப்புநிலம் ஆகியவை மற்ற இரண்டு புதிய இடங்களாகும். இத்துடன் ராம்சர் இடங்களின் எண்ணிக்கை 49–லிருந்து 54–ஆக அதிகரித்துள்ளது.

6. அயல்நாட்டு வர்த்தக இயக்குநரகமானது (DGFT) சமீபத்தில் PIMS–ஐ அறிமுகப்படுத்தியது. இதில், 'PIMS' என்பதன் விரிவாக்கம் என்ன?

அ. Product Import Monitoring System

ஆ. Paper Import Monitoring System ☑

இ. Prior Information Monitoring System

ஈ. Prohibited Goods Import Monitoring System

✓ அயல்நாட்டு வர்த்தக இயக்குநரகமானது (DGFT) Paper Import Monitoring System (PIMS)–ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. DGFT முதன்மை காகிதப் பொருட்களுக்கான இறக்குமதிக் கொள்கையை 'கட்டற்றது' என்பதிலிருந்து 'PIMS–இன் கீழ் கட்டாயப்பதிவுக்குட்பட்டு கட்டற்றது' என்று திருத்தியுள்ளது. இம்முறை 2022 அக்.1 முதல் நடைமுறைக்கு வரும். PIMS–இன்படி, ஒரு இறக்குமதியாளர் இணைய முறைமையில் தானியங்கி பதிவு எண்ணைப்பெறவேண்டும்.

7. அயல்நாட்டு வர்த்தகக் கொள்கைக்கான ஆலோசனைக் குழுவான 'வர்த்தக வாரியம்' யார் தலைமையின் கீழ் உள்ளது?

அ. பிரதமர்

ஆ. வெளிவிவகார அமைச்சர்

இ. வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சர் ☑

ஈ. நிதி அமைச்சர்

✓ அயல்நாட்டு வர்த்தகக் கொள்கை குறித்த ஆலோசனைக் குழுவான 'வர்த்தக வாரியம்' ஆனது வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சரின் தலைமையில் உள்ளது. இதில் மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் மற்றும் பொது மற்றும் தனியார் துறைகளைச் சேர்ந்த மூத்த அதிகாரிகள் பங்கேற்பாளர்களாக உள்ளனர். பெரிய மற்றும் சிறிய நிறுவனங்கள் உட்பட பல்வேறு துறைகளைச் சேர்ந்த 29 அதிகாரப்பூர்வமற்ற உறுப்பினர்களை வர்த்தக வாரியத்திற்கு இந்திய அரசாங்கம் பரிந்துரைத்துள்ளது.

8. பிரதமர் மோடி எந்த மாநில சட்டசபையின் நூற்றாண்டு நினைவுத்தூணை சமீபத்தில் (ஜூலை 2022) திறந்து வைத்தார்?

அ. உத்தர பிரதேசம்

ஆ. பீகார் ☑

இ. குஜராத்

ஈ. மகாராஷ்டிரா

✓ பீகார் சட்டமன்றக் கட்டிடத்தின் நூற்றாண்டு விழாவின் நிறைவைக் குறிக்கும் வகையில், பீகார் சட்டமன்றத்தின் நூற்றாண்டு நினைவுத்தூணைப் பிரதமர் நரேந்திர மோடி சமீபத்தில் திறந்து வைத்தார். நூற்றாண்டு தூணுக்கான அடிக்கல்லை இந்தியக் குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த் கடந்த ஆண்டு அக்.21 அன்று நாட்டினார். தூணின் அருகில் அமைந்துள்ள தோட்டத்திற்கு, 'சதாப்தி ஸ்மிருதி உதயன்' எனப்பிரதமர் அதிகாரப்பூர்வமாக பெயர்சூட்டுவார்.

9. அண்மையில் இந்தியாவிற்காக தங்கப்பதக்கம் வென்ற அர்ஜுன் பாபுதா, மெஹூலி கோஷ் மற்றும் துஷார் மானே ஆகியோர் சார்ந்த விளையாட்டு எது?

அ. பளு தூக்குதல்

ஆ. துப்பாக்கி சுடுதல் ☑

இ. குத்துச்சண்டை

ஈ. வாள்சண்டை



✓ டோக்கியோ ஒலிம்பிக்கில் வெள்ளி வென்ற அமெரிக்காவின் லூகாஸ் கோசெனிஸ்கியை வீழ்த்தி இந்தியாவின் அர்ஜுன் பாபுதா தனது முதல் சர்வதேச துப்பாக்கி சுடுதல் விளையாட்டு கூட்டமைப்பு (ISSF) உலகக்கோப்பை அரங்கில் தங்கம் வென்றார். கொரியாவின் சாங்வான் நகரில் சாம்பியன்ஷிப் போட்டி நடைபெற்று வருகிறது. உலகக் கோப்பை 10 மீ ஏர் ரைபிள் கலப்பு பிரிவில் மெஹூலி கோஷ் மற்றும் துஷார் மானே ஆகியோர் தங்கம் வென்றனர்.

10. எம்மி விருதுகளில் சிறந்த நாடகத்திற்காக பரிந்துரைக்கப்பட்ட முதல் ஆங்கிலம் மொழி சாராத தொடர் எது?

அ. ஸ்குவிட் கேம் ☑

ஆ. ஃபோர்ப்ரைடெல்சென்

இ. ஸ்பைரல்

ஈ. எல்'இம்போஸ்ஷர்

✓ 74ஆவது பிரைம் டைம் எம்மி விருதுகளுக்கான பரிந்துரைகள் அண்மையில் அறிவிக்கப்பட்டன. கலை மற்றும் பொழுதுபோக்கிற்கான அமெரிக்க விருது இது. இதில் 'சக்ஷஷன்' அதிக பரிந்துரைகளைப் (25) பெற்றது. தென் கொரிய நாடகமான ஸ்குவிட் கேம் 14 பரிந்துரைகளைப் பெற்றது மற்றும் எம்மி விருதுகளில் சிறந்த நாடகத்திற்காக பரிந்துரைக்கப்பட்ட முதல் ஆங்கிலம் மொழி சாராத தொடராகவும் அது ஆனது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. ₹28,732 கோடிக்கு ஆயுதங்கள் கொள்முதல்: பாதுகாப்பு அமைச்சகம் ஒப்புதல்

இலகுரக தானியங்கி துப்பாக்கி, ஆளில்லா சிறியரக விமானங்கள் (டிரோன்), குண்டு துளைக்காத ஆடை உள்ளிட்ட ஆயுதங்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களை ₹28,732 கோடி மதிப்பில் கொள்முதல் செய்வதற்கு பாதுகாப்புத் துறை அமைச்சகம் ஒப்புதலளித்தது.

பாதுகாப்புத்துறை அமைச்சர் இராஜ்நாத் சிங் தலைமையிலான பாதுகாப்புத்துறை கொள்முதல் கவுன்சில் (டிஏசி) இதற்கான ஒப்புதலை அளித்துள்ளது. கிழக்கு லடாக்கில் சீனாவுடன் 2 ஆண்டுகளுக்கும் மேலாக மோதல் போக்கு நிலவிவரும் சூழலில், இந்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

---

2. 240 கலைச் சொற்களுக்கு வல்லுநர் குழு ஒப்புதல்

தமிழக அரசின் அகரமுதலித் திட்ட இயக்ககம் சாா்பில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தமிழ்க் கலைக்கழகத்தின் 114–ஆவது கூட்டத்தில் 240 கலைச் சொற்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

Actinotherapy – கதிரிய மருத்துவம்; Airbyte – தரவல் தொகுப்பி; Awesome sauce – நறுஞ்சுவைச் சாறு; Blogpost – வலைப்பூப்பதிவு; Depth sensor – ஆழம் உணரி; Hospitality staff – விருந்தோம்பல் ஊழியர்; Jumpsuit – காப்புடை ஆகியவை உள்பட 240 தமிழ்க்கலைச்சொற்களுக்கு வல்லுநர் குழு ஏற்பளித்துள்ளது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

3. சிங்கப்பூரில் 11–ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு அடுத்த ஆண்டு மே மாதம் நடைபெறும்

உலகத்தமிழாராய்ச்சி மன்றம் சார்பில் 11–ஆவது உலகத்தமிழாராய்ச்சி மாநாடு அடுத்த ஆண்டு மே மாதம் 26, 27, 28 ஆகிய நாள்களில் சிங்கப்பூரில் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டுக்கான அறிமுகக் கூட்டம் சென்னை பத்திரிகையாளர் மன்றத்தில் நடைபெற்றது. 2019–ஆம் ஆண்டு அமெரிக்காவின் சிகாகோவில் 10–ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்றது.

---

4. பள்ளிக்கரணை, பிச்சாவரம் சதுப்புநிலங்கள் 'ராம்சர்' பட்டியலில் இணைப்பு

தமிழ்நாட்டின் பள்ளிக்கரணை, பிச்சாவரம், கரிக்கிளி உள்ளிட்ட ஐந்து சதுப்புநிலங்கள் சர்வதேச பாதுகாப்புக்கான 'ராம்சர்' பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளன.

சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் சதுப்புநிலங்கள் முக்கியப்பங்கு வகிக்கின்றன. அச்சதுப்புநிலங்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக ஈரானில் உள்ள ராம்சர் நகரில் 1971–ஆம் ஆண்டு சர்வதேச ஒப்பந்தம் கையொப்பமானது. அந்த ஒப்பந்தத்தின்கீழ் சர்வதேச அளவில் முக்கியத்துவம் வாய்ந்த சதுப்புநிலங்களைக் கூடுதல் கவனஞ்செலுத்தி பாதுகாக்க உறுதியேற்கப்பட்டது. முக்கியமாக, சதுப்புநிலங்களின் அழிவைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள நாடுகள் உறுதியேற்றன.

ராம்சர் பட்டியலில் இந்தியாவில் உள்ள 49 சதுப்புநிலங்கள் ஏற்கெனவே இணைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், தமிழ்நாட்டில் உள்ள பள்ளிக்கரணை சதுப்புநிலம், பிச்சாவரம் சதுப்புநிலம், கரிக்கிளி பறவைகள் சரணாலயம் ஆகியவையும் மிஸோரத்தின் பாலா சதுப்புநிலம், மத்திய பிரதேசத்தின் சாக்யநகர் சதுப்புநிலம் ஆகியவையும் ராம்சர் பட்டியலில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளன. இத்துடன் இந்தியாவில் உள்ள ராம்சர் சதுப்புநிலங்களின் எண்ணிக்கை 54–ஆக அதிகரித்துள்ளது.

ராம்சர் ஒப்பந்தம் கையொப்பமான பிப்ரவரி 2–ஆம் தேதியானது 'சர்வதேச சதுப்புநில தினமாக' கொண்டாடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

---

1. IMFஇன் (ஜூலை 2022) சமீபத்திய அறிக்கையின்படி, 2022–23–க்கான இந்தியாவின் வளர்ச்சி கணிப்பு என்ன?

அ. 6.8%

ஆ. 7.0%

இ. 7.4% ☑

ஈ. 8.0%

✓ பன்னாட்டு செலவாணி நிதியமானது (IMF) 2022–23 நிதியாண்டுக்கான இந்தியாவின் வளர்ச்சிக் கணிப்பை சாதகம் குறைந்த வெளிப்புறச் சூழல்கள் மற்றும் ரிசர்வ் வங்கியின் விரைவான கொள்கை இறுக்கம் ஆகியவற்றைக் காரணங்காட்டி 7.4 சதவீதமாகக் குறைத்துள்ளது. ஆசிய வளர்ச்சி வங்கி சமீபத்தில் இந்தியாவின் வளர்ச்சியை 7.5 சதவீதத்தில் இருந்து 7.2 சதவீதமாகக் குறைத்துள்ளது.

2. சமீபத்தில் யாருக்கு சர் வின்ஸ்டன் சர்ச்சில் தலைமைத்துவ விருது வழங்கப்பட்டது?

அ. ஜோ பைடன்

ஆ. நரேந்திர மோதி

இ. வோலோடிமிர் ஜெலென்ஸ்கி ☑

ஈ. ஜெசிந்தா ஆர்டெர்ன்

✓ இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சன், உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கிக்கு சர் வின்ஸ்டன் சர்ச்சில் தலைமைத்துவ விருதை வழங்கினார். லண்டன் அலுவலகத்தில் நடைபெற்ற விழாவில் காணொளி வழியாக ஜெலென்ஸ்கி அவ்விருதை ஏற்றுக்கொண்டார். ரஷ்யாவின் படையெடுப்பிற்குப் பிறகு உக்ரைனுக்குச் சென்ற முதல் மேற்கத்திய தலைவர் போரிஸ் ஜான்சன் ஆவார். சர்ச்சில் தலைமைத்துவ விருது முதன்முதலில் 2006ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

3. 2024–க்குப்பிறகு பன்னாட்டு விண்வெளி நிலையத்திலிருந்து வெளியேறப்போவதாக அறிவித்துள்ள நாடு எது?

அ. சீனா

ஆ. ரஷ்யா ☑

இ. அமெரிக்கா

ஈ. இஸ்ரேல்

✓ மாஸ்கோவின் விண்வெளி முகமையின் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தலைவரின் கூற்றுப்படி, 2024–க்குப் பிறகு பன்னாட்டு விண்வெளி நிலையத்திலிருந்து வெளியேற ரஷ்யா முடிவு செய்துள்ளது. ரஷ்யாவும் அமெரிக்காவும் 1998ஆம் ஆண்டு முதல் சுற்றுப்பாதையில் இருக்கும் ISS–இல் பணியாற்றி வருகின்றன. சோவியத் விண்வெளி திட்டத்தின் சில முக்கிய சாதனைகளாக கடந்த 1961–இல் மனிதனை முதன்முதலாக விண்வெளிக்கு அனுப்பியது மற்றும் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு முதல் செயற்கைக்கோளை அனுப்பியது உள்ளது.

4. பின்வரும் எந்த ஆண்டு நடைபெறும் ICC பெண்கள் கிரிக்கெட் உலகக்கோப்பையின் தொகுப்பாளராக இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டது?

அ. 2023

ஆ. 2025 ☑

இ. 2027

ஈ. 2030

2025

✓ பன்னாட்டு கிரிக்கெட் கவுன்சில் (ICC) வாரியம் வங்கதேசம், இந்தியா, இங்கிலாந்து மற்றும் இலங்கை ஆகிய நான்கு நாடுகளையும் ICC பெண்கள் கிரிக்கெட் போட்டிகளை நடத்தும் நாடுகளாக அங்கீகரித்துள்ளது. ICC பெண்கள் T20 உலகக்கோப்பைப் போட்டியானது 2024–இல் வங்கதேசத்தால் இரண்டாவது முறையாக நடத்தப்படும் அதே வேளையில், 2026ஆம் ஆண்டில் இங்கிலாந்தால் நடத்தப்படும். அடுத்த ICC பெண்கள் கிரிக்கெட் உலகக்கோப்பை 2025–இல் இந்தியாவும், 2027–இல் இலங்கையும் நடத்தும்.

5. அரசின் சமீபத்திய தரவுகளின்படி, இந்தியாவில் கடந்த மூன்று ஆண்டுகளில் எத்தனை புலிகள் இறந்துள்ளன?

அ. 29

ஆ. 129

இ. 229

ஈ. 329 ☑

✓ மக்களவையில் நடுவண் சுற்றுச்சூழல் துறை இணையமைச்சர் சமர்ப்பித்த தரவுகளின்படி, கடந்த 3 ஆண்டுகளில் வேட்டையாடுதல், இயற்கை மற்றும் இயற்கைக்கு மாறான காரணங்களால் இந்தியா 329 புலிகளை இழந்துள்ளது. இந்தக் காலப்பகுதியில் புலிகளின் தாக்குதலில் 125 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் அது மேலும் தெரிவித்துள்ளது. வேட்டையாடுதல், மின்சாரம் தாக்குதல், நஞ்சுத்தாக்கம் மற்றும் இரயில் விபத்துகள் காரணமாக இக்காலகட்டத்தில் சுமார் 307 யானைகள் இறந்துள்ளன. இவற்றில் கடந்த மூன்று ஆண்டுகளில் 222 யானைகள் மின்சாரந்தாக்கி உயிரிழந்துள்ளன.

6. 'கார்ச்சி' என்பது எந்த மாநிலம்/யூனியன் பிரதேசத்தில் கொண்டாடப்படும் ஒரு பாரம்பரிய விழாவாகும்?

அ. அஸ்ஸாம்

ஆ. திரிபுரா ☑

இ. மத்திய பிரதேசம்

ஈ. குஜராத்

✓ 'கார்ச்சி' என்பது ஒரு வார காலம் நீளும் பாரம்பரிய பண்டிகையாகும்; இதில் 14 தெய்வங்களுக்கு பிரார்த்தனை செய்யப்படுகிறது. திரிபுராவின் கயர்பூரில், நாடு முழுவதும் இருந்து திரண்டிருந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் முன்னிலையில் அந்தத் திருவிழா தொடங்கியது. ஹௌரா ஆற்றில் அத்தெய்வங்களின் திருமஞ்சன ஊர்வலத்துடன் அது தொடங்கியது.

7. சமீபத்திய NSO கணக்கெடுப்பின்படி, 2019–இல் 15–29 வயது வரையிலான திருமணமாகாதவர்களின் விகிதம் என்ன?

அ. 9%

ஆ. 15%

இ. 23% ☑

ஈ. 32%

✓ தேசிய புள்ளியியல் அலுவலக அறிக்கையின்படி, 2011–2019–க்கு இடைப்பட்ட காலத்தில், 15–29 வயதுக்குட்பட்ட திருமணமாகாதவர்களின் விகிதம் 17.2 சதவீதத்தில் இருந்து 23 சதவீதமாக அதிகரித்துள்ளது. ஆண்களில் திருமணமாகாதோரின் சதவீதம் 2011–இல் 20.8 சதவீதத்திலிருந்து 2019–இல் 26.1 சதவீதமாக உயர்ந்துள்ளது. அதே வேளையில், பெண்களில் அது 2011–இல் 13.5 சதவீதத்திலிருந்து 2019–இல் 19.9 சதவீதமாக அதிகரித்துள்ளது.

8. 2022 – இலண்டன் இந்திய திரைப்பட விழாவில், எந்த இந்திய திரைப்பட இயக்குநர்களுக்கு, 'ஐகான் விருது' வழங்கப்பட்டது?

அ. அபர்ணா சென் மற்றும் நந்திதா தாஸ் ☑

ஆ. லீனா மணிமேகலை மற்றும் நந்திதா தாஸ்

இ. சங்கர் மற்றும் லோகேஷ் கனகராஜ்

ஈ. நந்திதா தாஸ் மற்றும் சுதா கொங்கரா

✓ 2022 – இலண்டன் இந்திய திரைப்பட விழாவில் இந்திய மற்றும் உலகளாவிய சினிமாவுக்கு அவர்களாற்றிய பங்களிப்பிற்காக திரைப்பட இயக்குநர்கள் அபர்ணா சென் மற்றும் நந்திதா தாஸ் ஆகியோருக்கு 'ஐகான் விருது' வழங்கப்பட்டுள்ளது. இலண்டன் இந்திய திரைப்பட விழா (LIFF) லண்டன், பர்மிங்காம், மான்செஸ்டர் மற்றும் லீட்ஸ் ஆகிய நான்கு நகரங்களில் நடந்தேறியது.

9. ஆயுஷ் மருந்துகளின் விற்பனை குறித்து மின்னணு வணிக தளங்களுக்கு சமீபத்தில் ஆலோசனை வழங்கிய ஆணையம் எது?

அ. நடுவண் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் ☑

ஆ. ஆயுஷ் அமைச்சகம்

இ. சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம்

ஈ. NITI ஆயோக்

✓ நடுவண் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையமானது (CCPA) ஆயுர்வேத, சித்தா மற்றும் யுனானி (ஆயுஷ்) மருந்துகளை விற்பனை செய்வது குறித்து மின்னணு வணிக தளங்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது. ஆலோசனையின்படி, பதிவுசெய்யப்பட்ட மருத்துவர்களிடமிருந்து செல்லத்தக்க மருந்துக் குறிப்புகளை வாடிக்கையாளர்கள் பதிவேற்றிய பின்னரே, மின்னணு வணிக தளங்கள் ஆயுர்வேத, சித்தா மற்றும் யுனானி மருந்துகளை விற்பனை வேண்டும்.

10. அண்மையில் காலமான பிரிஜேந்திர குமார் சிங்கால், கீழ்க்காணும் எவ்வாறு அழைக்கப்பட்டார்?

அ. பசுமைப் புரட்சியின் தந்தை

ஆ. இந்தியாவில் இணையத்தின் தந்தை ☑

இ. வெண்மை புரட்சியின் தந்தை

ஈ. இந்தியாவில் பொதுத்துறை நிறுவனங்களின் தந்தை

✓ 'இந்தியாவில் இணையத்தின் தந்தை' என்று அழைக்கப்படும் பிரிஜேந்திர குமார் சிங்கால், சமீபத்தில் தனது 82ஆம் வயதில் காலமானார். அவர் விதேஷ் சஞ்சார் நிகம் லிமிடெட் நிறுவனத்தின் முன்னாள் தலைவராக இருந்தார். அவரது தலைமையின்கீழ், அந்த நிறுவனம் இந்தியாவில் இணைய சேவையை அறிமுகப்படுத்தியது. இவர் இதற்கு முன்பு இன்மார்சாட் என்ற செயற்கைக்கோள் தகவல் தொடர்பு நிறுவனத்துடன் தொடர்புடையவராக இருந்தார்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. தமிழ்நாட்டில் 534 கிராமங்களிலும், புதுச்சேரியில் 1 கிராமத்திலும் 4G மொபைல் சேவை வழங்கப்படவுள்ளது

நாட்டில் 4G மொபைல் சேவை இல்லாத கிராமங்களில் ₹26,316 கோடி மதிப்பில் அதனை முழுமையாக வழங்குவதற்கான திட்டத்திற்கு பிரதமர் தலைமையிலான நடுவண் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதன்

மூலம் தமிழ்நாட்டில் 534 கிராமங்களிலும், புதுச்சேரி 1 கிராமத்திலும் 4G மொபைல் சேவை அளிக்கப்படவுள்ளது. மொத்தம் நாடு முழுவதும் 24,680 கிராமங்களுக்கு 4G மொபைல் சேவை அளிக்கப்படவுள்ளது.

---

2. அமலாக்கத் துறைக்கு கைது செய்யும் அதிகாரம்: உச்சநீதிமன்றம் உறுதி

கைது செய்வது, சொத்துகளை முடக்குவது, சோதனையிடுவது, பறிமுதல் செய்வது ஆகிய அதிகாரங்கள் சட்டவிரோத பணப்பரிவர்த்தனை தடுப்புச் சட்டத்தின்கீழ் அமலாக்கத்துறைக்கு உள்ளதாக உச்சநீதிமன்றம் உறுதிசெய்துள்ளது.

அமலாக்கத் துறைக்கு பல்வேறு சட்ட அதிகாரங்கள் இல்லை என்றும், அரசியல் எதிரிகளைப் பழிவாங்கும் நோக்கில் அரசு இந்தச்சட்டங்களைக் கையாள்கிறது என்றும் தாக்கல் செய்திருந்த மனுக்களை உச்சநீதிமன்றம் விசாரித்து வந்தது. இதில் 545 பக்கங்கள் கொண்ட தீர்ப்பை நீதிபதிகள் ஏ எம் கான்வில்கர், தினேஷ் மகேஷ்வரி, சி டி ரவி ஆகியோர் அடங்கிய அமர்வு புதன்கிழமை அறிவித்தது. அதன் விவரம்:

உலக நிதி விவகாரங்களுக்கு சட்டவிரோத பணப்பரிவர்த்தனை பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. இதை சாதாரண குற்றமாக கருத முடியாது. சட்டவிரோத பணப்பரிவர்த்தனை சட்டத்தின் 45–ஆவது பிரிவின்படி, தெரிந்து செய்யும் குற்றங்களுக்கும், பிணையில் வெளியே வர முடியாத குற்றங்களுக்கும் பின்னர் பிணை வழங்க இரண்டு நிபந்தனை விதிப்பது சரியானது.

கைது செய்யும் அதிகாரம் அளிக்கும் பிரிவு 19, அரசியலமைப்புச் சட்டப்படி செல்லுபடியாகும். அதில் பல்வேறு பாதுகாப்பு ஷரத்துகளும் உள்ளன. சொத்துக்களை முடக்க அதிகாரம் அளிக்கும் பிரிவு 5, அரசியலமைப்புச் சட்டத்தின்படி செல்லுபடியாகும். ஒருவரை கைது செய்யும்போது அமலாக்கத் துறை வழக்கின் முதல் அறிக்கை (ECIR) காண்பிக்கப்பட வேண்டும் என்பது கட்டாயமில்லை. அமலாக்கத் துறை அதிகாரிகளை குற்றவியல் சட்டத்தின்படி இயங்கும் காவல் துறையினருக்கு நிகராக கருதக் கூடாது.

அதேபோல், நிதி மசோதாவாக நிறைவேற்றப்படாத, சட்டவிரோத பணப்பரிவர்த்தனை சட்டத் திருத்தத்தின் சில ஷரத்துகளை நீதிமன்றம் ஆராயவில்லை. இது, ஏழு நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வின் முடிவுக்கு விடப்பட்டுள்ளது.

---

3. முதல்வரின் காலை உணவுத் திட்டம் அறிமுகம்:

தமிழ்நாட்டில் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், 1,545 அரசு தொடக்கப் பள்ளிகளைச் சேர்ந்த ஒரு லட்சத்து 14,095 மாணவர்கள் பயன்பெறுவர்.

1920–இல் உணவுத் திட்டம்...

இந்தியாவிலேயே முதல்முறையாக தமிழ்நாட்டில் 102 ஆண்டுகளுக்கு முன்பாகவே மதிய உணவுத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதனை அப்போதைய சென்னை மாநகராட்சி நிர்வாகம் செயல்படுத்தியுள்ளது.

இதுதொடர்பான தமிழக அரசின் உத்தரவு: ஏழை, எளிய சமூகக் குழந்தைகளின் காலடிகள் கல்விச் சாலையை எட்ட முடியவில்லை என்பதைக் கருத்தில் கொண்டு ஒரு நூற்றாண்டுக்கு முன்பே பள்ளியில் உணவளிக்கும் திட்டத்தை முன்மொழிந்து நிறைவேற்றியது, அப்போதைய சென்னை மாநகராட்சி நிர்வாகம். மன்றத்தின் தலைவராக இருந்த சர் பிட்டி தியாகராயர் தலைமையில் மாநகராட்சி மன்றக்கூட்டம் நடந்தது. 1920 செப்.16 அன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், இந்தியாவிலேயே முதல்முறையாக, சென்னை ஆயிரம் விளக்கு மாநகராட்சிப் பள்ளியில் மதிய உணவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

1957–இல் மதிய உணவுத் திட்டத்தை முன்னாள் முதல்வர் கு. காமராஜர் தொடக்கி வைத்தார். இதற்காக ஒரு குழந்தைக்கு ஆண்டுக்கு ₹18 என்ற அளவில் ₹10 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டது. முதல்வராக இருந்த எம் ஜி ஆர் 9–ஆம் வகுப்பு வரையுள்ள மாணவர்களுக்கு அறிவித்த சத்துணவுத் திட்டம் 1982 ஜூலை.1–இல் திருச்சி மாவட்டம் பாப்பாகுறிச்சியில் தொடக்கப்பட்டது. சத்துணவுடன் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை முட்டை வழங்குவதை

1989–இல் அறிமுகப்படுத்தினார். 2008–ஆம் ஆண்டில் சத்துணவுடன் வாரம் 5 முறை முட்டைகள் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

---

4. மாமல்லபுரத்தில் 45 அடி உயர சிற்பக்கலைத்தூண்

மாமல்லபுரத்தின் நுழைவு வாயிலில், 45 அடி உயர சிற்பக்கலைத்தூணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

மாமல்லபுரத்தில் கைவினை கலையில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களின் நலனுக்காக 'கைவினை சுற்றுலா கிராமம்' என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் ஒருபகுதியாக, மாமல்லபுரத்தின் நுழைவு வாயிலில் 45 அடி உயரத்தில் அழகிய சிற்பக்கலைத்தூண் வடிவமைக்கப்பட்டுள்ளது.

சிறப்பு என்ன? சிற்பக்கலைத்தூணில் கலைநயமிக்க பல்லவர் கால சிம்மம், யாழி, தோகை விரித்தாடும் மயில்கள், யானைக்கூட்டம் ஆகிய உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. மாமல்லபுரத்துக்கு வரும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளை கவரும் வகையில் சிற்பக்கலைத்தூண் அமைக்கப்பட்டுள்ளது. செஸ் ஒலிம்பியாட் போட்டி, மாமல்லபுரத்தில் நடைபெறவுள்ள நிலையில், சதுரங்க வீரர்களையும், போட்டியைக்காண வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளையும், பொது மக்களையும் கவரும் வகையில் சிற்பக்கலைத்தூண் அமைக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

---

5. 'விக்ராந்த்' போர்க்கப்பல் கடற்படையிடம் ஒப்படைப்பு

உள்நாட்டிலேயே கட்டப்பட்ட முதல் விமானந்தாங்கி போர்க்கப்பலான 'விக்ராந்த்', இந்திய கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டது. சுதந்திர தினமான ஆகஸ்ட் 15–ஆம் தேதி விக்ராந்த் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்படும் எனத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது வரலாற்றுச் சிறப்புமிக்க தருணம் என்று இந்திய கடற்படை தெரிவித்துள்ளது. திட்டமிட்டதற்கு ஒரு மாதத்துக்கு முன்னரே போர்க்கப்பலை கடற்படையிடம் கொச்சின் கப்பல் கட்டுமான நிறுவனம் ஒப்படைத்துள்ளது.

விமானந்தாங்கி போர்க்கப்பல்களை உள்நாட்டிலேயே கட்டுவதற்கான திட்டத்தை கடந்த 2007–ஆம் ஆண்டு மத்திய அரசு செயல்படுத்தியது. அத்திட்டத்தின்கீழ் முதல் விமானந்தாங்கி போர்க் கப்பலாக 'விக்ராந்த்', சுமார் ₹20,000 கோடி மதிப்பில் கட்டப்பட்டது. கொச்சின் கப்பல் கட்டுமான நிறுவனம் அக்கப்பலைக் கட்டும் பணியை 2009–ஆம் ஆண்டு தொடங்கியது.

இத்துடன் விமானந்தாங்கி போர்க் கப்பலை உள்நாட்டிலேயே கட்டும் வலிமை கொண்ட ஒருசில நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் இணைந்துள்ளது.

விக்ராந்த் போர்க்கப்பலின் சிறப்பம்சங்கள்:

நீளம் – 262 மீட்டர்; அகலம் – 62 மீட்டர்; உயரம் – 59 மீட்டர்

டர்பைன்களின் எண்ணிக்கை – 4

எஞ்சின் திறன் – 88 மெகா வாட்

அதிகபட்ச வேகம் – மணிக்கு 28 நாட் (சுமார் 52கிமீ)

ஒருமுறை எரிபொருள் நிரப்பினால் செல்லும் தொலைவு – சுமார் 7,500 கடல்மைல்

இயக்கவல்ல போர் விமானங்கள் – மிக்–29கே, கமோவ்–31 உள்ளிட்டவை

இயக்கவல்ல ஹெலிகாப்டர்கள் – எம்ஹெச்–60ஆர், இலகுரக ஹெலிகாப்டர்கள் உள்ளிட்டவை

அறைகளின் எண்ணிக்கை – சுமார் 2,300

1. காலநிலை மாற்றத்தால் புலம்பெயர்ந்த எந்த வகை மக்களைப் பாதுகாப்பதற்காக ஐநா ஆதரவு முகமைகள் முதன்முதலில் உலகளாவிய கொள்கை கட்டமைப்பை வெளியிட்டன?

அ. முதியவர்கள்

ஆ. குழந்தைகள் ☑

இ. உடல் ரீதியாகவும் மனரீதியாகவும் ஊனமுற்றவர்கள்

ஈ. LGBTQ நபர்கள்

✓ புலம்பெயர்வுக்கான பன்னாட்டு அமைப்பு (IOM), ஐநா சிறார்கள் நிதியம் (UNICEF), ஜார்ஜ்டவுன் பல்கலைக்கழகம் மற்றும் ஐநா பல்கலைக்கழகம் ஆகியவை காலநிலை மாற்றத்தால் புலம்பெயர்ந்த குழந்தைகளைப் பாதுகாக்க முதல் உலகளாவிய கொள்கை கட்டமைப்பை வெளியிட்டன. "காலநிலை மாற்றத்தின் சூழலில் புலம்பெயரும் சிறார்களுக்–கான வழிகாட்டுதல் கோட்பாடுகள்" என்பது உள்நாட்டளவில் மற்றும் எல்லைதாண்டிய புலம்பெயர்வுகளுக்கு ஆளான சிறார்களின் சிக்கல்களுக்கு தீர்வுகாண்வதற்கான ஒன்பது கொள்கைகளின் தொகுப்பைக் கொண்டுள்ளது.

2. ஆண்டுதோறும், 'சர்வதேச புலிகள் நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ. ஜூலை.27

ஆ. ஜூலை.29 ☑

இ. ஜூலை.31

ஈ. ஆகஸ்ட்.1

✓ சர்வதேச புலிகள் நாளானது ஒவ்வோர் ஆண்டும் ஜூலை.29 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. புலிகள் பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்து தனிநபர்கள், அமைப்புகள் மற்றும் அரசாங்கங்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த நாளின் நோக்கமாகும். கடந்த நூற்றாண்டில் 97 சதவீத புலிகள் காணாமல் போனது கண்டறியப்பட்டதை அடுத்து, கடந்த 2010இல் சர்வதேச புலிகள் நாள் அறிமுகப்படுத்தப்பட்டது. WWF–படி, புலிகளின் தற்போதைய எண்ணிக்கை 3,900 ஆகும். உலகப் புலிகளின் எண்ணிக்கையில் சுமார் 70% இந்தியாவில்தான் உள்ளது.

3. 2022 – காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியக் கொடியேந்தியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?

அ. மேரி கோம்

ஆ. P V சிந்து ☑

இ. நீரஜ் சோப்ரா

ஈ. மீராபாய் சானு

✓ இந்திய ஒலிம்பிக் சங்கமானது (IOA) பர்மிங்காமில் நடைபெறவுள்ள 2022 – காமன்வெல்த் விளையாட்டு தொடக்க விழாவில் இருமுறை ஒலிம்பிக் பதக்கம் வென்ற வீராங்கனை P V சிந்துவை இந்திய அணியின் கொடியேந்தியாக அறிவித்தது. காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளின் 2022 பதிப்பு, விளையாட்டுப் போட்டிகளின் வரலாற்றில் அதிக பெண் விளையாட்டு வீரர்களைக் கொண்டதாக உள்ளது. 20 விளையாட்டுகளில் 205 பங்கேற்பாளர்கள் அவ்விளையாட்டுகளில் பங்கேற்கவுள்ளனர். முன்னணி ஈட்டியெறிதல் வீரர் நீரஜ் சோப்ரா காயம் காரணமாக இப்போட்டியில் பங்கேற்கவில்லை.

4. உள்ளடக்கப்படாத அனைத்து கிராமங்களிலும் 4G மொபைல் சேவைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, ஒரு திட்டத்தைச் செயல்படுத்தவுள்ளதாக அறிவித்துள்ள தொலைத்தொடர்பு சேவை நிறுவனம் எது?

அ. பார்தி ஏர்டெல் **ஆ. BSNL ☑**

இ. ஜியோ ஈ. வி!

✓ 4G மொபைல் சேவை இல்லாத கிராமங்களில் ₹26,316 கோடி மதிப்பில் அதனை முழுமையாக வழங்குவதற்கான திட்டத்திற்கு பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான நடுவண் அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. இதன் மூலம் ஊரகப்பகுதிகளில் உள்ள 24,680 கிராமங்களுக்கு 4G மொபைல் சேவை அளிக்கமுடியும். மேலும் 2G, 3G மொபைல் சேவை வசதி மட்டும் உள்ள 6,279 கிராமங்கள் 4G மொபைல் சேவை வசதி பெற்ற கிராமங்களாக மேம்படுத்தப்பட உள்ளது.

5. சிறு ஏற்றுமதியாளர்களை ஆதரிப்பதற்காக மேம்படுத்தப்பட்ட ஏற்றுமதிக் கடன் அபாயக் காப்பீட்டுத் தொகையை வழங்குவதற்கு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்திய நிறுவனம் எது?

அ. LIC

ஆ. ECGC ☑

இ. PFRDA

ஈ. IRDAI

✓ சிறு ஏற்றுமதியாளர்களை ஆதரிப்பதற்காக 90 சதவீதம் வரை மேம்படுத்தப்பட்ட ஏற்றுமதிக் கடன் அபாய காப்பீட்டுத் தொகையை வழங்கும் புதிய திட்டமொன்றை இந்திய ஏற்றுமதிக் கடன் உத்தரவாதக் கழகம் (ECGC) அறிமுகம் செய்துள்ளது. Export Credit Insurance for Banks Whole Turnover Packaging Credit and Post Shipment (ECIB– WTPC & PS) காப்பீட்டின்கீழ் இக்காப்பீடு வழங்கப்படுகிறது. வங்கிகளில் ஏற்றுமதிக் கடனைப் பெறும் சிறிய அளவிலான ஏற்றுமதியாளர்களுக்கு இந்தத் திட்டம் பயனளிக்கும்.

6. 'உலகளாவிய பாலின இடைவெளி' குறித்த அறிக்கையை வெளியிடுகிற நிறுவனம் எது?

அ. ஐநா பெண்கள் அமைப்பு

ஆ. உலக பொருளாதார மன்றம் ☑

இ. பன்னாட்டு செலவாணி நிதியம்

ஈ. உலக வங்கி

✓ 2022ஆம் ஆண்டிற்கான உலகளாவிய பாலின இடைவெளி குறித்த குறியீட்டை உலக பொருளாதார மன்றம் (WEF) சமீபத்தில் வெளியிட்டது. ஐஸ்லாந்து (90.8%) உலக தரவரிசையில் முதலிடத்தில் உள்ளது. இந்தியா 146 நாடுகளில் 135ஆம் இடத்தில் உள்ளது. கடந்த ஆண்டு, 156 நாடுகளில் இந்தியா 140ஆம் இடத்தில் இருந்தது. அறிக்கையின்படி, உலகளாவிய பாலின இடைவெளியை முழுவதுமாக ஒழிக்க இன்னும் 132 ஆண்டுகள் ஆகும்.

7. 'சர்வதேச நெல்லாராய்ச்சி நிறுவனத்தின்' தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?

அ. ஆடுதுறை, தமிழ்நாடு, இந்தியா

ஆ. மணிலா, பிலிப்பைன்ஸ்

இ. லாஸ் பானோஸ், பிலிப்பைன்ஸ் ☑

ஈ. ரோம், இத்தாலி

✓ சர்வதேச நெல்லாராய்ச்சி நிறுவனம் (IRRI) என்பது பிலிப்பைன்ஸில் உள்ள லாஸ் பானோஸ், லகுனாவில் அதன் தலைமையகத்தைக் கொண்ட ஒரு சர்வதேச வேளாண் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமாகும். இது, 1960–இல் நிறுவப்பட்டது. இந்தியாவின் உழவு & உழவர் நலத்துறையானது (DA&FW) IRRI தெற்காசிய பிராந்திய மையத்தின் (ISARC) கட்டம்–2 நடவடிக்கைகளுக்காக சர்வதேச நெல்லாராய்ச்சி நிறுவனத்துடனான (IRRI) உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ளது.

8. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற மெஸ் ஐநாக் உள்ள நாடு எது?

அ. இலங்கை

ஆ. பாகிஸ்தான்

இ. சீனா

ஈ. ஆப்கானிஸ்தான் ☑

✓ பண்டைய கால பௌத்த நகரமான மெஸ் ஐனாக், தாமிரப் பிரிப்பு மற்றும் அதுசார் வணிகம் சார்ந்த ஒரு பரந்த நகரம் ஆகும். இது ஆப்கானிஸ்தானின் காபூலுக்கு அருகில் உள்ள சிகரங்களின் அருகே உள்ளது. இது 1,000 முதல் 2,000 ஆண்டுகள் பழமையானது என்று நம்பப்படுகிறது. 2007ஆம் ஆண்டில், சீன சுரங்க நிறுவனமான மெட்டலர்ஜிகல் குரூப் கார்ப்பரேஷன் 30 ஆண்டுகளுக்கு தாது சுரங்கப்பணியை மேற்கொள்வதற்காக மூன்று பில்லியன் டாலர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இந்தத் திட்டம் மீண்டும் தலிபான்களுக்கும் சீனாவுக்கும் முன்னுரிமை அளிக்கிறது.

9. செர்பியாவில் நடந்த 2022 – பாராசின் ஓபன் 'A' செஸ் போட்டியில் வென்ற இந்திய வீரர் யார்?

அ. குகேஷ்

ஆ. பிரக்ஞானந்தா ☑

இ. விஸ்வநாதன் ஆனந்த்

ஈ. சௌமியா சுவாமிநாதன்

✓ இளம் இந்திய கிராண்ட்மாஸ்டரான R பிரக்ஞானந்தா, செர்பியாவில் நடந்த 2022 – பாராசின் ஓபன் 'A' சதுரங்கப் போட்டியில் வென்றார். 16 வயதான அவர் ஆட்டமிழக்காமல் ஒன்பது சுற்றுகளில் இருந்து 8 புள்ளிகளைப் பெற்றார். தமிழ்நாட்டில் சென்னையில் நடைபெறவுள்ள 44ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டியில் வலுவான இந்திய 'B' அணியில் அவர் இடம்பெறுவார்.

10. யூரோமணியால், 'உலகின் மிகச்சிறந்த SME வங்கி' என அறிவிக்கப்பட்ட வங்கி எது?

அ. RBS வங்கி

ஆ. DBS வங்கி ☑

இ. பாரத வங்கி

ஈ. ஸ்டாண்டர்ட் சார்ட்டர்ட் வங்கி

✓ DBS வங்கி, 'உலகின் மிகச்சிறந்த SME வங்கி' என யூரோமணியால் இரண்டாவது முறையாக அறிவிக்கப்பட்டது. அவ்வங்கி மேலும் மூன்று விருதுகளை வென்றுள்ளது. உலகின் மிகச்சிறந்த, 'ஆண்டின் நிதியியல் கண்டுபிடிப்பு', 'செல்வ மேலாண்மைக்கான ஆசியாவின் சிறந்த வங்கி' மற்றும் 'ஹாங்காங்கின் சிறந்த வங்கி' ஆகியவை அடங்கும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. அல் நஜா–IV என்ற இந்தியா, ஓமான் கூட்டு ராணுவப் பயிற்சியில் பங்கேற்கும் ஓமான் நாட்டு வீரர்கள் இந்தியா வருகை

இந்திய ராணுவம் மற்றும் ஓமான் ராணுவம் இடையேயான அல் நஜா–IV என்ற இந்தியா ஓமான் கூட்டு ராணுவப் பயிற்சியின் நான்காவது பதிப்பு ஆகஸ்ட் 1 முதல் 13 ஆம் தேதி வரை இராஜஸ்தானில் நடைபெறவுள்ளது. இதில் கலந்துகொள்வதற்காக ஓமான் ராணுவத்தின் பாராசூட் படையைச் சேர்ந்த 60 வீரர்கள் இந்தியா வந்துள்ளனர். 18

இயந்திரமயமாக்கப்பட்ட காலாட்படையைச் சேர்ந்த வீரர்கள் குழு இந்திய இராணுவத்தின் சார்பாக இதில் கலந்து கொள்ளும்.

தீவிரவாத எதிர்தாக்குதல் நடவடிக்கைகள், பிராந்திய பாதுகாப்பு செயல்பாடுகள் மற்றும் அமைதியை நிலை நிறுத்தும் நடவடிக்கைகளுடன் உடற்தகுதி பயிற்சி, செயல்முறை மற்றும் நடைமுறைகளிலும் கூட்டுப் பயிற்சி கவனம் செலுத்தும். இந்தியா மற்றும் ஓமான் நாட்டு ராணுவங்களுக்கிடையே உள்ள பாதுகாப்பு ஒத்துழைப்பை அடுத்த நிலைக்கு மேம்படுத்துவதையும், இரு நாடுகளின் உறவை வலுப்படுத்துவதையும் இந்தப் பயிற்சி இலக்காகக் கொண்டுள்ளது.

---

2. காமன்வெல்த் போட்டியில் இந்தியாவிற்கு முதல் தங்கம்: சாதித்த மீராபாய் சானு

காமன்வெல்த் தொடரின் பளுதூக்குதல் போட்டியின் 49 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் மீராபாய் சானு தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

மகளிர் பளுதூக்குதல் போட்டியின் 49 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் மீராபாய் சானு தங்கப்பதக்கம் வென்று சாதித்துள்ளார். நடப்பு காமன்வெல்த் போட்டியில் இந்தியா பெறும் முதல் தங்கப்பதக்கம் இதுவாகும். முன்னதாக ஆடவருக்கான 61 கிலோ எடைப்பிரிவு பளு தூக்குதல் போட்டியில் இந்தியாவின் குருராஜா வெண்கலம் வென்றார். இந்திய வீரர் குருராஜா மொத்தம் 269 கிலோ எடையை தூக்கி 3ஆம் இடம்பிடித்தார்.

55 கிகி எடைப்பிரிவில் இந்தியாவின் சங்கேத் சர்கார் வெள்ளிப்பதக்கம் வென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

3. பிரதமர் மோடியின் கவிதை புத்தக ஆங்கில பதிப்பு ஆகஸ்டில் வெளியீடு

பிரதமர் மோடி குஜராத்தி மொழியில் எழுதிய 'லெட்டர்ஸ் டு செல்ஃப்' என்ற புத்தகத்தின் ஆங்கிலப் பதிப்பு ஆகஸ்டில் வெளியாகிறது.

பிரதமர் மோடி இந்தப் புத்தகத்தில் உள்ள கவிதைகளை குஜராத்தி மொழியில் பல ஆண்டுகால அளவில் எழுதி வந்தார். அவை தொகுக்கப்பட்டு 'ஆன்க் ஆ தன்யாச்சே' என்ற பெயரில் கடந்த 2007–இல் வெளியானது. இதனை திரைப்பட பத்திரிகையாளரும் வரலாற்று ஆய்வாளருமான பாவனா சோமயா ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். பிரகாஷ் புத்தக நிறுவனம் இந்த ஆங்கிலப்பதிப்பு புத்தகத்தை வெளியிடுகிறது. கவிதைகளை ஆங்கிலத்தில் பாவனா சோமயா என்பவர் மொழிபெயர்த்துள்ளார். கவிதை மட்டுமன்றி தேர்வெழுதும் மாணவர்களின் மனக்கலக்கத்தைப் போக்க, 'எக்ஸாம் வாரியர்ஸ்' என்ற புத்தகத்தையும் பிரதமர் மோடி எழுதியுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

4. 'காலச்சுவடு' கண்ணனுக்கு செவாலியே விருது

பிரான்ஸ் நாட்டின் உயரிய விருதான செவாலியே விருது 'காலச்சுவடு' பதிப்பகத்தின் பதிப்பாளரும் நிர்வாக இயக்குநருமான கண்ணன் சுந்தரத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பிரான்ஸ் அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்தியா–பிரான்ஸ் இடையிலான பதிப்புத்துறை ஒத்துழைப்புக்கான பங்களிப்புக்காக செவாலியே விருது கண்ணன் சுந்தரத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு அதிபர் இமானுவல் மேக்ரான் ஒப்புதல் அளித்துள்ளார். தில்லியில் உள்ள பிரான்ஸ் தூதர் இல்லத்தில் செப்டம்பர் அல்லது அக்டோபரில் நடைபெறும் விழாவில் இந்த விருது வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் நடிகர்கள் சிவாஜி கணேசன், கமல்ஹாசன், மொழிபெயர்ப்பாளர் ஸ்ரீராம், மதன கல்யாணி உள்ளிட்டோர் ஏற்கெனவே செவாலியே விருது பெற்றுள்ளனர்.